# மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஓட்டுத் தொழிற்சாலைகளது உற்பத்தி, செயற்பாட்டு மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்






**செயலாற்றல் கணக்காய்வு - 2019**



**பிரிவு : TCM**

**கிளை : TCM/A**



**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | நிறைவேற்றுப் பொழிப்புரை | 01-02 |
| 02 | அறிமுகம் | 02 |
| 2.1 | ஓட்டு உற்பத்திக் கைத்தொழிலின் வரலாற்று ரீதியான பின்னணி | 02-07 |
| 2.2 | ஓடுகளது பாவனையாலான பெறுபேறுகள் | 07-08 |
| 2.3 | கணக்காய்விற்கான விடயத்தைத் தெரிவு செய்வதற்கான காரணம் | 08-10 |
| 2.4 | கணக்காய்வின் பரப்பெல்லையும் பரப்பெல்லை மட்டுப்படுத்தப்படுதலும் | 11 |
| 2.4.1 | பரப்பெல்லை | 11 |
| 2.4.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 11 |
| 2.4.3 | பரப்பெல்லை மட்டுப்படுத்தப்படுதல் | 11-12 |
| 2.5 | கணக்காய்வின் நோக்கம் | 12-13 |
| 2.6 | கணக்காய்வின் அளவுகோல் | 13-14 |
| 03 | கணக்காய்வு அவதானிப்புகள் | 14 |
| 3.1 | தற்சமயம் செயற்பட்டவாறிருக்கும் எரகம தொழிற்சாலை தொடர்பான மதிப்பாய்வு | 14-15 |
| 3.1.1 | உற்பத்தி நடவடிக்கைகளின் பகுப்பாய்வு | 16-18 |
| 3.1.2 | இயந்திரங்களதும் ஏனைய வசதிகளதும் பயன்பாடு | 19-25 |
| 3.1.3 | நிலைமைக் கட்டுப்பாடு | 25-26 |
| 3.1.4 | உற்பத்திக் கிரயமும் செயற்பாட்டு நடவடிக்கைகளும் | 26-27 |
| 3.1.5 | விற்பனை | 27-31 |
| 3.2 | தற்காலிகமாக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள் | 31-32 |
| 3.2.1 | இயந்திரங்களதும் ஏனைய வசதிகளதும் பயன்பாடு | 32-36 |
| 3.2.2 | உற்பத்திக்கான களிமண் முடிவடைதல் | 36 |
| 3.2.3 | தொழிற்சாலைகளின் ஓட்டு உற்பத்தி | 36-37 |
| 3.2.4 | விற்பனை | 37-41 |
| 3.2.5 | எஞ்சிய கையிருப்பு | 41-43 |
| 3.3 | நெடுங்காலமாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் | 43-44 |
| 3.3.1 | சொத்துக்கள் மற்றும் ஏனைய வசதிகளின் பயன்பாடு | 44-47 |
| 3.3.2 | வே உட தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குதல் | 47 |
| 3.3.3 | ஓட்டுச்சுட்டான் தொழிற்சாலையை மீண்டும் திறத்தல் | 47-48 |

| | | |
|---|---|---|
| 3.4 | மட்பாண்டக் கூட்டுத்தாபனப் பணிகளை ஒழுங்குபடுத்தலும் கூட்டுத்தாபனம் வழங்கும் சமூக, பொருளாதார நலன்களும் | 48 |
| 3.4.1 | அரசாங்க கொள்கையை அமுலாக்குதல் | 48-49 |
| 3.4.2 | வரிசை அமைச்சினது பங்களிப்பு | 49-50 |
| 3.4.3 | மனிதவள முகாமைத்துவம் | 50 |
| 3.4.4 | நவீன உற்பத்தி முறைமையைப் பின்பற்றுதல் | 51 |
| 3.4.5 | சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு | 51-53 |
| 3.4.6 | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைவதற்குப் பங்களித்தல் | 53-54 |
| 04. | பரிந்துரை | 54-55 |
| | இணைப்பு 01 | |
| | இணைப்பு 02 | |
| | இணைப்பு 03 | |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

---------------------------------------------

இலங்கையில் களி மண்ணுடன் இணைந்த ஓட்டு உற்பத்திக் கைத்தொழில் 1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அது 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் அதிகாரச்சட்டத்தின் கீழ் இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனம் என நிறுவப்பட்டிருந்தது. இலங்கையில் தரமான ஓடுகள், செங்கற்கள், களி மண்ணுடன் இணைந்த உற்பத்திகளில் சந்தையில் பிரபல்யமடைவதே கூட்டுத்தாபனத்தின் எண்ணக் கருவாகும். உயர் தரத்திலான உற்பத்திகளை போட்டியுடனான கூறுவிலைகளின் கீழ் சகல நுகர்வோரும் திருப்தியடையும் வண்ணம் வழங்குதலும் அதற்கான சமுதாயப் பொறுப்பை வகிப்பதும் அதன் நோக்கமாகும்.

பிரதான பணிகளையும் தொலைநோக்கையும் முன்னோடியாகக் கொண்டு தீவடங்கிலும் 09 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இச்செயலாற்றல் கணக்காய்வை நடாத்துவதற்கு தூண்டுகோளாக அமைந்த பிரதான காரணங்களாக, பொதுமக்களது சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்காத உற்பத்திகளைப் பாதுகாத்துக் கொள்ளுதல், அரச துறையின் உரித்துடைய உள்ளூர்க் கைத்தொழிலை பாதுகாத்தல், சுற்றாடலுக்கு உகந்த உற்பத்தியாக அமைதல் மற்றும் நிழல் வழங்கும் மாற்றீட்டுப் பொருட்களுக்கு செலவாகும் அந்நியச் செலாவணியை நாட்டினுள் வைத்திருத்தல் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்படலாம்.

செயலாற்றல் கணக்காய்வு 2019 ஆகஸ்ட் தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப்பகுதியின்போது திட்டமிடப்பட்டு அமுலாக்கப்பட்டது. கணக்காய்வின்போது ஆவணச் சான்றுகளைச் சேகரித்தல், களப் பரிசோதனை, நேரடிச் சரி, பிழை பார்த்தல் மற்றும் கேள்விக் கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகளது பொழிப்பில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும். தற்சமயம் செயற்பட்டவாறிருக்கும் ஒரேயொரு ஓட்டுத் தொழிற்சாலையான எரகம தொழிற்சாலை தொடர்பான உற்பத்தி நடவடிக்கைகளது பகுப்பாய்வு, இயந்திரங்களும் ஏனைய வசதிகளினதும் பயன்பாடு, விற்பனை போன்ற விடயங்களது அவதானிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஓட்டுத் தொழிற்சாலைகளது இயந்திர சாதனங்கள் மிகப் பழமை வாய்ந்தனவாதலால் அடிக்கடி அவை செயற்பாடின்றி உற்பத்தித் தடை ஏற்படுவது அவதானிக்கப்பட்டது. தொழிற்சாலைகளில் பணிபுரிந்த பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு அகற்றப்பட்டமையால், போதியளவு பயிற்றப்பட்ட ஊழியர்கள் பணியிலமர்த்தப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையும், உற்பத்தி

செய்யப்பட்ட ஓடுகளில் இழப்பு அதிகரித்து உற்பத்தி தரங் குன்றியிருந்ததும் உஸ்வெவ போன்ற தொழிற்சாலைகளில் தரங்குன்றிய ஓடுகளை விற்பனை செய்தமையால் விற்பனை செய்யப்பட்ட ஓடுகளது கையிருப்பு ஏற்க மறுக்கப்பட்டுமிருந்தன. ஏற்க மறுக்கப்பட்ட அந்த ஓடுகளின் கையிருப்பால் விளைந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்கான செலவினமும் ஏற்பட்டிருந்தது.

## 2. அறிமுகம்

----------------

### 2.1 ஓட்டு உற்பத்திக் கைத்தொழிலின் வரலாற்று ரீதியான பின்னணி

------------------------------------------------------------------------------------------------------------

மனிதனது மூலத் தேவைகளில் மூன்றாவது இடத்தை வகிப்பது வீடாகும். இதனடிப்படையில் அதிகரித்துவரும் அபிவிருத்தியுடன் பல்வேறு வகையான கட்டிடங்கள் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வீடமைப்பு நிர்மாணப் பணியில் கூரையானது அலங்காரத்திற்கும் பாதுகாப்பிற்கும் பிரதான மூலப் பிரிவாக அமைகின்றது. இதன்போது நிழல்தரும் ஒன்றாக இது மிக முக்கிய பங்காற்றுகின்றது. நிழல் தரும் இந்த அமைப்பானது திடீரெனத் தோன்றியது அல்ல. காலங்காலமாக மெல்ல மெல்ல படிப்படியாக நடைபெறும் விடயம் என்பது தெளிவானதாகும். சாதாரன நிழலின் கீழும், மறைவிடங்களிலும், கற்குகைகளிலும் வசித்த புராதன மனிதன் இயற்கையின் பாதிப்புகள் காணமாக ஏற்படும் இடர்களிலிருந்து மீள்வதற்கு வீடு ஒன்றை அமைப்பதற்கு எண்ணியிருப்பினும் அதன் கூரை எவ்வாறு அமைய வேண்டும் என எண்ணியிருப்பானோ என்பது தெளிவில்லை. வீட்டின் ஒரு பகுதியாக பின்னர் அது உருமாறியிருக்கலாம். அந்த எண்ணக்கருவுடன் வீட்டின் கூரை அமைப்பானது நிச்சயமாக அவனுக்கு பிரச்சினைக்குரியதாக அமைந்திருக்கும். ஆரம்ப கட்டங்களில் சூழவர உள்ள இலகுவாக இனங்காணக் கூடிய மரங்களை அவன் பயன்படுத்தியிருக்கலாம். அண்மைய காலம் வரை மான, இலுக் போன்ற புல்வகைகளும், பனை ஓலை, தென்னம் ஓலை போன்ற மரத்திலான ஓலைகளும் சாய்ந்த சருகுகளும், பெங்கிரி, வைக்கோல் போன்ற கமத்தொழில் செய்கை மூலம் பெறப்படுபவனவும் கூரைக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறாக ஆரம்பமாகிய கூரை அமைப்பானது தற்போது நெடுந்தூரம் பயணம் செய்துள்ளது.

மஹிந்தரின் வருகையையடுத்து புத்த தர்மம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதை நாடளாவிய ரீதியில் வாஸ்து அடிப்படையில் விஹாரைகள் நிர்மாணிக்கப்பட ஆரம்பித்தன். அதற்கெனக் களி மண்ணைச் சூடாக்கித் தயாரித்த கூரை ஓடுகள், சூடாக்கப்பட்ட களிமண்ணால் ஆன நில ஓடுகள் மற்றும் சூடாக்கப்பட்ட களிமண்ணாலான செங்கற்கள் என்பவற்றைப் பயன்படுத்தியமையைத் தொல்பொருள் ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. ஓட்டுக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன்,

பல்வேறு வண்ணங்களுடன் கலைநுட்பத்துடன் அமைந்த ஓடுகளும் உற்பத்தியாகியுள்ளன என்பது பொலநறுவையிலும் அனுராதபுரத்திலும் இருந்த மன்னர்களது ஆட்சிக்கால நிலத் தொல்பொருள் அகழ்வின் மூலம் நிரூபணமாகியுள்ளது. இவ்வாறாக ஆரம்பமாகிய உள்நாட்டு ஓட்டுக் கைத்தொழிலின் இறுதி அங்கமே ‘‘சிங்கள ஓடு’’ எனும் பெயரில் அறிமுகமாகியுள்ள, பழைய கட்டிடங்களது கூரைகளில் தற்போதும் காணப்படுகின்றது.

**கூட்டுத்தாபனத்தை நிறுவுதல்**

-----------------------------------------------

இலங்கையின் களிமண் உற்பத்திக் கைத்தொழிலின் ஆரம்பத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து மிகவும் முக்கியமான நிகழ்வாக அமைவது 1955 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசாங்க அனுசரணைக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1955 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 10823 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் ‘‘இலங்கை மட்பாண்டம்’’ எனும் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டதாகும். 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1958 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 11466 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ‘‘இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்’’ என அதன் பெயர் மாற்றத்திற்குள்ளாகி அடுத்து வந்த காலங்களில் அரச கூட்டுத்தாபனமாக அமைக்கப்பட்டது. தற்சமயம் அதன் தலைமை அலுவலகம் கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்தையில் 561/3 ஆம் இலக்கத்தில் உள்ளது.

**ஓட்டுத்தொழிற்சாலைகளை அமைத்தல்**

----------------------------------------------------------------

இலங்கையின் கைத்தொழில் வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டதும் தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படுவதுமான 04 ஓட்டு, செங்கல் தொழிற்சாலைகள் (பங்கதெனிய, வே உட, யட்டியன, அனுராதபுரம்) மற்றும் இலங்கையின் கனிய வள வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டதுமான ஓட்டு, செங்கல் உற்பத்திகள், களி மண்ணோடு இணைத்து அமைக்கப்பட்ட 03 ஓட்டு, செங்கல் தொழிற்சாலைகள் (ஒட்டுச்சுட்டான், எரகம, மஹியங்கனை) என்பன 1972 மற்றும் 1973 ஆம் ஆண்டுகளில் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தன. அடுத்து வந்த காலப்பகுதியின்போது பிங்கிரிய தொழிற்சாலை கூட்டுத்தாபனத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்தது. உஸ்வெவ தொழிற்சாலையை ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திக் சபை சுவீகரித்திருந்தது. நிறுவப்படுதல், ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு மற்றும் பயன்படுத்திய தொழில்நுட்பம் என்பவற்றுக்கமைய தொழிற்சாலைகளது விபரம் பின்வருமாறு.

| ஓட்டுத் தொழிற்சாலையின் பெயர் | மாகாணம் | மாவட்டம் | ஆரம்பித்த ஆண்டு | கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு | இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்த நாடு |
|---|---|---|---|---|---|
| எரகம | கிழக்கு | அம்பாறை | 1958 | 1972 | ஜெர்மனி |
| பங்கதெனிய | வட மேல் | புத்தளம் | 1964 | 1972 | செக்கொஸ்லோவேகியா |
| வே உட | வட மேல் | குருநாகல் | 1965 | 1972 | செக்கொஸ்லோவேகியா |
| யட்டியன | தெற்கு | மாத்தறை | 1964 | 1972 | செக்கொஸ்லோவேகியா |
| எலயாபத்துவ | வட மத்திய | அனுராதபுரம் | 1965 | 1973 | செக்கொஸ்லோவேகியா |
| ஒட்டுச்சுட்டான் | வடக்கு | முல்லைத்தீவு | 1968 | 1972 | செக்கொஸ்லோவேகியா |
| மஹியங்கனை | ஊவா | பதுளை | 1961 | 1972 | ஜெர்மனி |
| பிங்கிரிய | வட மேல் | குருநாகல் | 1977 | 1977 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தின் கீழ் அமைக்கப்பட்டது. | - |
| உஸ்வெவ | சபரகமுவ | இரத்தினபுரி | 1968 | 1980 | செக்கொஸ்லோவேகியா |

இத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடம் வரைபட இணைப்புக்கள் 01 மற்றும் 02 என்பவற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**கூட்டுத்தாபனத்தின் மட்பாண்டப் பிரிவு மக்கள் மயப்படுத்தப்படல்**

1977 ஆம் ஆண்டில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டதையடுத்து ஓட்டுக் கைத்தொழிலில் தனியார் துறையினரும் ஈடுபட்டு அரசாங்கத்திற்குச் சொந்தமான மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. மேலே குறிப்பிடப்பட்ட 09 தொழிற்சாலைகளினதும் உற்பத்தி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைவதற்கு தங்கொட்டுவ பிரதேசத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தனியார் ஒட்டு உற்பத்தி தொழிற்சாலைகளின் ஆரம்பமும் பல்வேறு வகை கூரைப் பொருட்களின் பயன்பாடும் நாட்டில் எஸ்பெஸ்டொஸ் கைத்தொழில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்திருக்கலாம். திறந்த பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலனாக கூட்டுத்தாபனத்தின் பெறுமதி மிக்க மட்பாண்டப் பிரிவு 1990 ஆம் ஆண்டில் மக்கள்மயப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஓட்டு, செங்கல் கூறானது ‘‘இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்’’ எனும் பெயரில் இதுநாள்வரை செயற்பட்டவாறுள்ளது.

1990 ஆம் ஆண்டில் மட்பாண்ட (செரமிக்) பிரிவு மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர், மிக நீண்ட பயணத்தின் பெறுபேறாக இலங்கையின் 07 மாகாணங்களில் 08 மாவட்டங்களில் 09 ஓட்டுத் தொழிற்சாலைகளைக் கூட்டுத்தாபனம் நிர்வகித்து வந்ததும் மேலே குறிப்பிடப்பட்ட ஓட்டு, செங்கல் தொழிற்சாலைகளுக்கிடையே ஒரு தொழிற்சாலையான வடமாகாணத்தில் அமைந்த ஒட்டுச்சுட்டான தொழிற்சாலை 1982 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக 1992 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. அதனையடுத்து, 2003 ஆம் ஆண்டில் புத்தளத்தில் உள்ள பங்கதெனிய தொழிற்சாலை மூடப்பட்டு, காணியைத் தவிர ஏனைய சொத்துக்கள் யாவும் விற்பனை செய்யப்பட்டன. 2009 ஆம் ஆண்டில் வே உட மற்றும் எலயாபத்துவ தொழிற்சாலைகளும் மூடப்பட்டன.

**இழப்பீட்டைப் பெற்றவாறு ஊழியர்கள் தன்னிச்சையாக ஓய்வு பெறுதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------

கூட்டுத்தாபனம் ஒட்டுமொத்தமாக நெடுங்காலமாக நட்டத்தில் இயங்கியதும், சாதகமற்ற நிதி முகாமைத்துவத்தின் காரணமாகவும் திறைசேரிக்குச் சுமையாக விளங்கிய கூட்டுத்தாபனம் 2010 தொடக்கம் மீள வியூகப்படுத்தலுக்காக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அகற்றப்பட்டு பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் PE/COMC/TR-20 இலக்க 2010 யூலை 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கமைய, 2012 ஆம் ஆண்டில் இழப்பீட்டைப் பெற்றவாறு தன்னிச்சையாக ஓய்வுபெற்ற 495 ஊழியர்களுக்கு ஓய்வூதிய இழப்பீடாக ரூபா 326,936,589 வழங்கப்பட்டு ஊழியர்கள் ஓய்வு பெற்றதுடன் எலயாபத்துவ தொழிற்சாலையும் மூடப்பட்டது.

**தகுதிவாய்ந்த அதிகாரியை நியமனஞ் செய்தலும் நிர்வாகமும்**

-----------------------------------------------------------------------------------------------------------

2010 யூலை 01 ஆந் திகதி நியமனஞ் செய்யப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரியினது கடமைகளுள், 2010 செப்டம்பர் 24 ஆந் திகதிய அரசாங்க வளங்கள் மற்றும் பொது முயற்சிகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 10/2423/425/004-1 இலக்க அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 2010 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 10/2543/425/004-V ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் என்பவற்றின் பொருட்டு 2010 ஒக்டோபர் 20 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சகல தொழிற்சாலைகளையும் வெவ்வேறாகவோ அல்லது ஒருங்கிணைந்தவாறோ 30 ஆண்டு நெடுங்காலத் தவணையில் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின்போது தன்னிச்சையாக ஓய்வூதிய இழப்பீட்டைப் பெறும் திட்டத்தை (VRS) அமுல்படுத்தி இழப்பீட்டை வழங்கி

ஊழியர்களை ஓய்வுபெறச் செய்தமை மற்றும் பங்கதெனிய தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்தமையைத் தவிர, ஒரு தொழிற்சாலையையேனும் குத்தகைக்கு வழங்குவதற்கு சபையின் முதல் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் தவறியிருந்தார். அவரது பதவிக் காலம் 2015 சனவரி 22 ஆந் திகதி முடிவுக்கு வந்தது.

2015 பெப்ரவரி 26 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு வரிசை அமைச்சான கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சினது அமைச்சரால் இரண்டாவது தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். அந்நியமனத்திற்கு நிதி அமைச்சின் இணக்கத்தைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவுமில்லை. அத்தகுதிவாய்ந்த உத்தியோகத்தரால் அச்சமயத்தில் மூடப்பட்டிருந்த யட்டியன தொழிற்சாலை அடங்கலாக 05 ஓட்டுத் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு நடாத்தப்பட்டவாறிருந்தன. உற்பத்தியாகிய ஓடுகளது பிரச்சினை மற்றும் அரசாங்க கொள்கைக்கமைய எஸ்பெஸ்டஸ் மீதான தடை நீக்கம், ஓடுகளது விற்பனை வீழ்ச்சியடைந்தமை மற்றும் நிதிப் பற்றாக்குறை என்பன காரணமாக 2018 சனவரி 25 முதல் எலயாபத்துவ, மஹியங்கனை, யட்டியன மற்றும் உஸ்வெவ ஆகிய 04 தொழிற்சாலைகள் உற்பத்தி நடவடிக்கைகளை இற்றைவரை நிறுத்தியிருந்தன. அதற்கமைய, தற்சமயம் எரகம தொழிற்சாலை மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், 2018 செப்டம்பர் 13 முதல் இரண்டாவது தகுதி வாய்ந்த அதிகாரியும் நீக்கப்பட்டு, அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், மூன்றாவது தகுதி வாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். 2010 யூலை முதல் 2019 செப்டம்பர் வரையான 09 ஆண்டுகளின்போது ஊழியர்கள் இழப்பீட்டுடன் சேவை நீக்கம் செய்யப்பட்டமையும் பங்கதெனிய தொழிற்சாலைக்குரிய சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டமையும், தொழிற்சாலைகள் தற்காலிகமாகத் திறக்கப்பட்டு நடாத்தப்பட்டமையும், மீண்டும் 04 தொழிற்சாலைகள் மூடப்பட்டமையும் தவிர, நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளை அவர்கள் நிறைவேற்றத் தவறியிருந்தனர்.

**கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிலைமை**

--------------------------------------------------------------------------------

ஓடுகளுக்குப் பதிலாக, மாற்றீடுகள் சந்தைகளில் விரைவாக நுழைந்தமையும், அம்மாற்றீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி வீடுகளது கூரைகளைத் தயாரிப்பதற்கான செலவினம் குறைவடைந்தமையும், குறைந்த மரப் பலகைகளுடனும் குறைந்த செலவுடனும் அம்மாற்றீடு பயன்படுத்தப்பட்டு வீடொன்றினது கூரையைத் தயாரிக்கும் ஆற்றல் இருந்தமையும் காரணமாக ஓட்டுக்கான தேவை விரைந்து குறைவடைந்தது. மேலும், 2016 செப்டம்பர் 06 ஆந் திகதிய அரசாங்க கொள்கைத் தீர்மானத்தின்

அடிப்படையில் 2018 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் பொருட்டு சுற்றாடலுக்கு உகந்ததாக அமையாத எஸ்பெஸ்டொஸ் இறக்குமதியையும் பயன்பாட்டையும் இலங்கையில் கட்டுப்படுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2017 டிசெம்பர் 19 ஆந் திகதியன்று மேற்படி எஸ்பெஸ்டொஸினது இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை அமுலாக்காதிருப்பதற்கு அரசாங்கம் மீண்டும் கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டமை போன்ற காரணங்களால் தற்சமயம் ஓடுகளது விற்பனை விரைவாகக் குறைவடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் தன்னிச்சையாக இழப்பீட்டைப் பெறும் திட்டத்தை அமுலாக்கியதன் பின்னர் எஞ்சியிருந்த 37 ஊழியர்களையும் அமைய ஊழியர்களையும் ஈடுபடுத்தி, பொதுத் திறைசேரியின் நிதி உதவியின்றி சுய நிதியுடனான கூட்டுத்தாபனமாக, இற்றை வரை கூட்டுத்தாபனத்தின் நாளாந்தச் செலவினத்தை ஈடுசெய்தவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 2.2 ஓடுகளது பாவனையாலான பெறுபேறுகள்

---------------------------------------------------------------------

தொழில்நுட்ப முன்னேற்றத்தையடுத்து பல்வேறு கூரைகளுக்கான பொருட்களைக் கட்டிடத்தில் பயன்படுத்தும் நிலை உருவாக்கியுள்ளது. அவற்றுள் எஸ்பெஸ்டொஸ் சுருள் தகடுகள், சூடாக்கிய கெல்வனைஸ்ட் சுருள் தகடுகள், சூடாக்கிய அலுமினியம் / செப்புச் சுருள் தகடுகள் மற்றும் எரியூட்டப்பட்ட கண்ணாடியிலான கண்ணாடித் தகடுகள் மற்றும் எரியூட்டப்பட்ட கூரை ஓடுகள் என்பன விசேட ஸ்தானத்தில் உள்ளன. எவ்வாறாயினும், தற்சமயம் பயன்படுத்தப்படும் ஓடுகளுக்கு இணையாக பிரதியீடு ஒன்றை உருவாக்க முடியவில்லை. இதற்கான முக்கிய காரணங்களாக இயற்கையாகவே ஓடுகளில் உள்ள இளங் கறுப்பு வர்ணமும் இலகுவாக அவை வழங்கக் கூடிய கவர்ச்சியும் சுகாதாரத்துக்கு உகந்த தன்மையும் சூரிய வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் உள்ளமையையும் குறப்பிடப்படலாம். இவற்றின் காரணமாக, கட்டிட நிர்மாணப் பணிகளில் இக்கூரைப் பொருட்களுக்கு உயரளவிலான கோரிக்கைகள் நிலவுகின்றன. மேலும், ஓடுகளால் ஆன கூரை குளிர்ச்சியூட்டுவன. சுற்றாடல் ரீதியாகவும் அவை பெறுமதி மிக்கனவாகும். நிர்மாணத் துறையினரின் வேண்டுகோளுக்கமைய பல்வேறு கலைநுட்பத்துடனான, உள்ளூரில் உருவாக்கப்பட்ட களிமண்ணால் ஆன ஓட்டு வகைகள் அநேகளவில் சந்தையில் கிடைப்பதற்குள்ளன. அவ்வாறான பல்வேறு வழங்கல்களைக் கொண்ட ஓடுகள் சந்தையில் தொடர்ந்தும் வந்தவாறுள்ளன. அதற்கமைய, களி மண்ணாலான ஓடுகளது பாவனையின் பல்வேறு பெறுபேறுகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுள்,

(அ) நெடுங்காலமாகக் கூரையாகப் பயன்படுத்தக்கூடியது.

(ஆ) பல்வேறுபட்டதும் சௌந்தர்யம் மிக்கதுமான பெறுமதியைக் கொண்டிருத்தல்.

(இ) எதிர்த்து நிற்கும் ஆற்றல் (தீ, ஓசை, வெப்பம் என்பவற்றிற்கு ஈடுகொடுக்க வல்லது)

(ஈ) சக்திமிக்கதும் இழப்பு ஏற்படுமிடத்து குறைந்த செலவில் ஈடுசெய்யக்கூடியதும்.

(உ) சுற்றாடலுக்கு உகந்த இயற்கையான உள்ளூர் மூலப் பொருட்களின் அடிப்படையில் அமைந்த உள்ளூர் கைத்தொழிலாக அமைதல்.

(ஊ) வெப்பத்தைத் தனிப்பதால் வீட்டினுள் குளிர்ச்சி பாதுகாக்கப்பட்டு வினைத்திறனுடனான எரிசக்தியும் பொருளாதார நலன்களும் கிடைக்கப்பெறுதல்

(எ) சுகாதாரப் பாதுகாப்பாக நிழல் தருவது.

### 2.3 கணக்காய்விற்கான விடயத்தைத் தெரிவு செய்வதற்கான காரணம்

---

#### (அ) அரச துறையில் உரித்துடைய உள்ளூர் கைத்தொழில் ஒன்றைப் பாதுகாத்தல்

---

இலங்கையில் ஓட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச நிறுவனம் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனமாகும். இக்கூட்டுத்தாபனம் அரசாங்கத்தின் மீள் வியூகப்படுத்தல் நடவடிக்கைகளுக்குள்ளானது. அதற்கமைய, 2010 ஆம் ஆண்டு தொடக்கம் அதன் சகல பணிகளையும் நிறைவேற்றுவதன் பொருட்டு தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஓடு, செங்கல் தொழிற்சாலைகள் வெவ்வேறாக அல்லது ஒருங்காக தனியார் துறையினருக்குக் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. 2010 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான 09 ஆண்டு காலப்பகுதியின்போது பொதுத் திறைசேரிக்குச் செலவை ஏற்படுத்தாதவாறு சகல செலவினங்களையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டமையால் இக்கைத்தொழிலைப் பாதுகாப்பது எமது நோக்கமாக அமைந்தது.

**(ஆ) கூரைகளுக்கான மாற்றீட்டுப் பொருட்களுக்குச் செலவாகும் அந்நியச் செலாவணியை நாட்டினுள் தேக்கி வைத்தல்**

---

ஓடுகளைத் தவிர கூரைகளுக்குப் பயன்படுத்தும் ஏனையவற்றிற்கு மாற்றீட்டு உற்பத்திக்கு தேவைப்படும் மூலப் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் செலவாகும் பணத்தை ஓட்டு உற்பத்தியின் மூலமும் அதன் அதிகளவு பயன்பாட்டின் மூலமும் நாட்டினுள் வைத்திருப்பதற்கான ஆற்றல் இருத்தலும் அதன் ஊடாக இறக்குமதிச் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டு தேசிய பொருளாதாரம் சிறந்த நிலையை அடைதலும்.

**(இ) ஏற்றுமதிச் சந்தையை அணுகுவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.**

---

தற்சமயம் தனியார் துறையினர் சிறிய அளவில் கூரை ஓடுகளது ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளதுடன் காலத்தின் தேவைக்கேற்ப அதன் பொருட்டு ஓட்டுத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து நடாத்தி ஏற்றுமதிச் சந்தையில் உட்புகுவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு உதவியளித்தல் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு சக்தியைப் பெற்றுத் தருதல்.

**(ஈ) பொதுமக்களது சுகாதாரத்திற்கு உகந்த உற்பத்தியைப் பாதுகாத்தல்**

---

இலங்கையின் கட்டிட நிர்மாணத்துறையில் கூரைகளுக்காகப் பயன்படுத்தும் பிரதான பொருட்கள் ஓடுகளும் எஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளுமேயாகும். 2016 செப்டம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் இறக்குமதியாகும் வெள்ளை எஸ்பெஸ்டொஸ்களில் ஏறக்குறைய 80 சதவீதமானவை கூரைகளுக்கான தகட்டு உற்பத்திக்கே பயன்படுத்தப்படுகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தினால் (WHO) புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியதாக இனங்காணப்பட்ட நீல எஸ்பெஸ்டொஸ் (Crocidolite) இலங்கையில் இறக்குமதி செய்யப்படுவது 1987 ஆம் ஆண்டு தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் இலங்கையில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் வெள்ளை எஸ்பெஸ்டொஸ் (Chrysotile) அடங்கலாக சகல வகை எஸ்பெஸ்டொஸ்களும் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியனவாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் இனங்காணப்பட்டுள்ளன. அதற்கமைய, எஸ்பெஸ்டொஸ் மூலம் சுகாதாரத்துக்கு ஏற்படும் சாதகமற்ற தாக்கத்தைக்

குறைத்தவாறு மக்களின் சுகாதார நிலைமையை அதிகரிக்கச் செய்வதற்கு ஆற்றல் உள்ளமையால், அக்கைத்தொழிலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**(உ) சுற்றாடலுக்கு உகந்த உற்பத்தியாக அமைதல்**

---

களி மண்ணானது நூற்றுக்கு நூறு வீதம் நெடுங்காலம் நிலைத்து நிற்கவல்ல கூடிய, சுற்றாடலுக்கு உகந்த, அதாவது சுற்றாடலுக்கு மாறாக அமையாத வளமாகும். இந்த வளத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஓடானது ஏனைய கூரைப் பொருட்கள் போன்றல்லாது மனித வாழ்விற்கும் சுற்றாடலுக்கும் உகந்த உற்பத்தியாக அமைதல்.

**(ஊ) உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களையும் தொழிற்சாலைகளையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல்.**

---

தீவடங்கிலும் 08 மாவட்டங்களையும் உள்ளடக்குமாறு அமைக்கப்பட்டுள்ள 08 ஓட்டுத் தொழிற்சாலைகள் கூட்டுத்தாபனத்திற்குரியனவாகும். உற்பத்திக்குத் தேவையான சகல வசதிகளும் (களிமண், விறகு, மணல், இயந்திரக்கூடம், தொழிலாளர்) அத்தொழிற்சாலைகளில் உள்ளபோதும் மீள் வியூகப்படுத்தல் திட்டத்தினால் உருவாகியுள்ள மட்டுப்படுத்தல் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வளங்கள் பயனற்றுள்ளன.

**(எ) தொழிற்சாலைகளைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கைத்தொழில் பாதுகாப்பற்றுப் போதல்**

---

அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலைகளை தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகளின்போது ஓட்டுத் கைத்தொழில் பாதுகாப்பற்றுப் போனது. தொழிற்சாலைகளைத் தனியார் துறையினருக்குக் குத்தைகக்கு வழங்குவதன் அடிப்படையில் பங்கதெனியவில் உள்ள தொழிற்சாலைக் கட்டிடமும் இயந்திரங்களும் உபகரணங்களும் முதன்முதலாக விற்பனை செய்யப்பட்டன. இரண்டாவது கட்டமாக, தற்சமயம் வே உட தொழிற்சாலையை மருத்துவமனைச் செயற்திட்டம் ஒன்றிற்கு 50 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளதுடன், அதற்கமைய ஓட்டுக் கைத்தொழில் அழிவடைந்துள்ளது.

## 2.4 கணக்காய்வின் பரப்பெல்லையும் பரப்பெல்லை மட்டுப்படுத்தப்படுதலும்

----------------------------------------------------------------------------------------------------------------------

### 2.4.1 பரப்பெல்லை

--------------------

செயலாற்றல் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச ஸ்தாபனம் (இன்டோசாய்) வெளியிட்ட வழிகாட்டலுக்கு அமைய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. எமது செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புகளினதும் பரிந்துரைகளதும் அடிப்படையில் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்குக் குறிப்பிடப்பட்ட நோக்கத்தை எந்தளவிற்கு எய்த முடியும், அதனை எய்துவதில் உள்ள ஆபத்துக்கள் எவை எனத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்டு உணரப்படும்.

### 2.4.2 கணக்காய்விற்கான அதிகாரம்

--------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154 ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 2.4.3 பரப்பெல்லை மட்டுப்படுத்தப்படுதல்

----------------------------------------------------------

(அ) கூட்டுத்தாபனத்தின் கீழ் 2019 செப்டம்பர் மாதமளவில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரேயொரு ஓட்டுத் தொழிற்சாலையான எரகம தொழிற்சாலையின் 2015 தொடக்கம் 2019 யூலை 31 வரையான உற்பத்தி, செயற்பாடு, விற்பனை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதும் 2018 சனவரி 25 தொடக்கம் தற்காலிகமாக உற்பத்தியை இடை நிறுத்திய மஹியங்கனை, உஸ்வெவ, யட்டியன, பிங்கிரிய உப தொழிற்சாலைகளது ஆவணச் சான்றுகள் இன்மையால் 2017 தொடக்கம் 2019 யூலை வரையான காலப்பகுதிக்குரிய உற்பத்தி, செயற்பாடு, விற்பனை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதும்.

(ஆ) கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது தொடக்கம் தற்சமயம் வரையான நிலைமையைத் தெரிவிக்கும் சட்டபூர்வ ஆவணங்கள் எதுவும் பாதுகாப்பாக கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலோ அல்லது களப் பரிசோதனைக்குட்பட்ட 04 ஓட்டுத் தொழிற்சாலைகளிலோ பேணப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, செயலாற்றல் கணக்காய்வு

அறிக்கைகளுக்குப் போதுமான ஆவண உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் எமது பரப்பெல்லை மட்டுப்படுத்தப்பட்டது.

(இ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் சமர்ப்பிக்கப்படாததுமான அமைச்சரவையினது இணைக் குழு அறிக்கைகள், அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்கள் என்பவற்றிலான தாக்கங்களைத் தவிர, அதன் பிழையற்ற தன்மையையும், கூட்டுத்தாபனத்தின் ஓடுகள் தவிர்ந்த ஏனைய துணை உற்பத்திகள் தொடர்பாகவும் இவ்வறிக்கையில் கலந்துரையாடப்படமாட்டாது.

(ஈ) அரசாங்க கொள்கை, கூரை ஓட்டுக் கிரயம் மற்றும் பிரதியீட்டுக் கூரைப் பொருட்கள் தொடர்பான மக்களின் ஈர்ப்பு தொடர்பாகவும் எமது அறிக்கையில் பெருமளவில் கலந்துரையாடப்படமாட்டாது.

(உ) கூட்டுத்தாபனத்தின் ஓட்டு உற்பத்தி விசாலமானதாலும் பாரம் மிக்கதாலும், ஓடுகள் தனியார் தொழிற்சாலை ஓடுகளை விட வேறுபடுவதாலும் தனியார் துறை ஓடுகளுடன் கூட்டுத்தாபன உற்பத்தி ஓடுகளை ஒப்பிடும் ஆற்றல் இல்லாதிருந்தது.

## 2.5 கணக்காய்வின் நோக்கம்

-----------------------------------------

### (அ) பிரதான நோக்கம்

-----------------------------

2019 யூலை மாதமளவில் நெடுங்காலமாக மூடப்பட்டிருந்த மற்றும் 2018 சனவரி 25 தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த தொழிற்சாலைகள் தொடர்பான மதிப்பாய்வு மற்றும் தற்சமயம் உற்பத்தியில் ஈடுபட்டவாறிருக்கும் எரகம தொழிற்சாலையின் உற்பத்தி, செயற்பாடு, விற்பனை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

### (ஆ) உப கணக்காய்வு நோக்கம்

---------------------------------------------

(i) தற்சமயம் செயற்பட்டவாறிருக்கும் ஒரேயொரு தொழிற்சாலையினது உற்பத்தி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

(ii) எரகம தொழிற்சாலையின் விற்பனை நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

(iii) உற்பத்தியைத் தற்காலிகமாக இடை நிறுத்திய தொழிற்சாலைகளை மதிப்பாய்வு செய்தல்.

(iv) செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்திய தொழிற்சாலைகளை மதிப்பாய்வு செய்தல்.

(v) நிறுவனம் இயங்குவது தொடர்பான அரசின் தலையீட்டை மதிப்பாய்வு செய்தல் (இதன் கீழ் அரசாங்க கொள்கையும் அமைச்சரவைத் தீர்மானமும் தொடர்பாக வெகுவாக கலந்துரையாடப்படமாட்டாது)

(vi) தொழில்நுட்பப் பாவனையை மதிப்பாய்வு செய்தல்.

(vii) தொழிற்சாலைகளின் மூலம் ஏற்படும் சமுதாய மற்றும் பொருளாதார பங்களிப்பை மதிப்பாய்வு செய்தல்.

**2.6 கணக்காய்வின் அளவுகோல்**

-----------------------------------------------

(அ) 1995 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசாங்க அனுசரணை அதிகாரச்சட்டத்தின் கீழான 1955 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 10823 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்.

(ஆ) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் அதிகாரச்சட்டத்தின் கீழான 1958 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 11466 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்.

(இ) 2010 ஒக்டோபர் 28 ஆந் திகதிய அமப/10/2423/425/004-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

(ஈ) 2011 நவம்பர் 17 ஆந் திகதிய அமப/11/2068/5553/018-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

(உ) 2015 யூன் 01 ஆந் திகதிய அமப/15/0602/012-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

(ஊ) பொது முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் PE/COMC/TR-20 ஆம் இலக்கத்தையுடைய 2010 யூலை 01 ஆந் திகதிய கடிதம்

(எ) 2018 செப்டம்பர் 05 ஆந் திகதிய PS/SD/NFPU/08/18 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் ''தேசிய உணவு உற்பத்தி ஆண்டு - 2018'' என்பதன் வாயிலாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை

(ஏ) 2018 மார்ச் 17 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையான ''அரசாங்கத்தின் நிதிசாரா சொத்து முகாமைத்துவம், பயன்படுத்தப்பட்ட முடியாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்தல்'' சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை

(ஐ) 2010 ஒக்டோபர் 20 ஆந் திகதிய அமப10/2423/425/004-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

(ஒ) 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் கடிதம (நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம்)

(ஓ) ஓடுகளது தரம் தொடர்பாக நிராகரிக்கப்படும் ஓடுகளது எண்ணிக்கையும் சதவீதமும்

## 03. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 தற்சமயம் செயற்பட்டவாறிருக்கும் எரகம தொழிற்சாலை தொடர்பான மதிப்பாய்வு

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் எரகம கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள எரகம ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலை 1958 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமாக இருந்த இந்தத் தொழிற்சாலை 1972 ஒக்டோபர் 01

ஆந் திகதி மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான முதலாவது ஓடு, செங்கல் தொழிற்சாலை இதுவாகும்.

**தொழிற்சாலையின் உற்பத்தி ஆற்றல்**

---------------------------------------------------------------

| தயாரிக்கப்படும் ஓடுகளின் வகை | ஆற்றல் (நாளொன்றிற்கு) ஓடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பெதலி ஓடுகள் | 11,600 |
| முதுன் ஓடுகள் | 950 |

இத்தொழிற்சாலையானது கூட்டுத்தாபன உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் விசாலமான காணியுடைய ஒரேயொரு தொழிற்சாலையாகும். ஓட்டு உற்பத்திக்குத் தேவைப்படும் வர்ணம் மற்றும் தரம் வாய்ந்த களிமண் என்பன இத்தொழிற்சாலைக் காணியிலேயே பெறப்படுவதுடன், ஏனைய தொழிற்சாலைகளில் நிலவும் மூலப் பொருள் பிரச்சினை இத்தொழிற்சாலையில் கிடையாது. பெதிலி ஓடுகள், முதுன் ஓடுகள் மற்றும் செங்கற்கள் என்பன இத்தொழிற்சாலையின் பிரதான உற்பத்திகளாகும். எரகம தொழிற்சாலை 232 ஏக்கர், 00 றூட், 20 பர்ச்சர்ஸ் உடையதாகும். 1978 டிசெம்பர் 28 ஆந் திகதிய 16/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 03 துண்டுகளாக அமைந்துள்ள இக்காணி கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்தது.

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரகம தொழிற்சாலையின் 100 ஊழியர்கள் தன்னிச்சையாக சேவையிலிருந்து விலகும் அடிப்படையில் 2012 மார்ச் 31 தொடக்கம் இழப்பீட்டுட்டன் ஓய்வு பெற்றிருந்தனர். 05 ஊழியர்கள் தன்னிச்சையாக ஓய்வுபெற்று இழப்பீட்டைப் பெறாமையால், தொடர்ந்தும் தொழிற்சாலைகளில் பணியாற்றியவாறிருந்தனர். கூட்டுத்தாபனத்துடன் எதுவித ஆவண உடன்படிக்கையுமின்றி 2012 மார்ச் தொடக்கம் இலங்கை இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையணி இத்தொழிற்சாலையின் வளத்தைப் பயன்படுத்தி ‘‘சந்தஹிறு சேய’’ நிர்மாணச் செயற்திட்டத்திற்கான செங்கல் உற்பத்தியை ஆரம்பித்திருந்தது. எஞ்சிய 05 கூட்டுத்தாபன ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையிலும், கூலிக்கமர்த்தப்பட்ட ஊழியர்களையும் பயன்படுத்தி தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்போது நடைபெறுவதுடன், தற்சமயம் கூட்டுத்தாபனத்தின் சகல செலவினமும் இத்தொழிற்சாலையின் வருமானத்தின் மூலமே ஈடுசெய்யப்படுகின்றது.

### 3.1.1 உற்பத்தி நடவடிக்கைகளின் பகுப்பாய்வு

1958 ஆம் ஆண்டு தொடக்கம் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுவதுடன் 1972 ஒக்டோபர் 01 தொடக்கம் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்ட எரகம தொழிற்சாலையின் தற்போதைய உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

**எரகம தொழிற்சாலையில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்களும் உற்பத்தி நடவடிக்கைகளும்**

எக்ஸ்கவேட்டர் இயந்திரம் - களி மண் வெட்டுதலும் கலக்குதலும்

டிறக்டர் - களி மண்ணையும் விறகையும் கொண்டு செல்லுதல்

↓

பொக்ஸ்பீடர் - களிமண்ணைக் கலந்து சிறு துகள்களாக்குதல் (இயந்திரம் பழுதடைந்துள்ளதுடன் இரு தொழிலாளர் இப்பணிகளைச் செய்கின்றனர்.

↓

கண்வெயர் பெல்ட் - களிமண்ணை ரணமில் இயந்திரத்திற்கு இட்டுச் செல்லல்

↓

ரணமில் இயந்திரம் - களி மண்ணை அரைத்தல்

↓

கன்வெயர் பெல்ட் - அரைத்த களிமண்ணை (பயின் ரோலுக்குக்) கொண்டு செல்லுதல்


↓

பயின்ரோல் - சிறு துகள்களாக களி மண்ணை அரைத்தல்

↓

கன்வெயர் பெல்ட் - துகள்களாகிய களிமண்ணை பக்மில் இயந்திரத்திற்கு இட்டுச் செல்லுதல்.

↓





மேலே குறிப்பிடப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளின்போது பெதலி ஓடு, முதுன் ஓடு என இரு வகை ஓடுகள் இனங்காணப்பட்டுள்ளன. கடந்த 04 ஆண்டுகளின்போதும் 2019 ஆம் ஆண்டின் 07 மாதங்களின்போதும் அவற்றினது உற்பத்தி நிலைமை பின்வருமாறு

| **ஆண்டு** | **உற்பத்தியான பெதலி ஓடுகள் (ஓடுகள்)** | **உற்பத்தியான முதுன் ஓடுகள் (ஓடுகள்)** |
|---|---|---|
| 2015 | 1425191 | 24597 |
| 2016 | 1737503 | 41029 |
| 2017 | 1624646 | 56226 |
| 2018 | 1277421 | 4122 |

| | | |
|---|---|---|
| 2019.07.31* | 643325 | 15731 |

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட தொழிற்சாலை உற்பத்திகளது வருடாந்த முரண்கள் பின்வருமாறு வரைபடத்தில் காணப்படுகின்றது.




மேற்குறிப்பிடப்பட்ட எரகம தொழிற்சாலை உற்பத்தி சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெதலி ஓடுகளது உற்பத்தி 1,425,191 ஓடுகளாகும். அந்த உற்பத்தியானது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,737,503 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2019 யூலை 31 ஆந் திகதியளவில் உற்பத்தி படிப்படியாக குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முதுன் ஓடுகளது உற்பத்தி 24,597 ஓடுகளாகும். அந்த உற்பத்தியானது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது படிப்படியாக அதிகரித்து 2019 யூலை 31 ஆந் திகதியளவில் உற்பத்தி படிப்படியாக குறைய ஆரம்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தொழிற்சாலைக்குச் சொந்தமான இயந்திர சாதனங்கள் மிகப் பழமை வாய்ந்தவையாதலால், அவை அடிக்கடி பழுதடைந்தவாறிருந்தன. தற்சமயம் துண்டுகளின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படுவதால் இயந்திர சாதனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுள்ளன.

### 3.1.2 இயந்திரங்களதும் ஏனைய வசதிகளதும் பயன்பாடு

--------------------------------------------------------------------------------

#### (அ) பெதலி ஓடுகளுக்கான பிரஸ் இயந்திரப் பயன்பாடு

--------------------------------------------------------------------------------

தொழிற்சாலையில் பெதலி ஓடுகளது உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 03 பிரஸ் இயந்திரங்கள் இருந்தன. அதில் ஒரு இயந்திரம் 2002 தொடக்கம் இற்றை வரை செயற்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தது. இந்த இயந்திரம் 1 - படத்தில் காட்டப்பட்டுள்ளது. ஏனைய இரு இயந்திரங்களும் ஓடுகளை உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கொண்டிருந்தபோதும். ஓடுகளுக்கான கோரிக்கை குறைவடைந்துள்ளமை காரணமாக அந்த இரு இயந்திரங்களில் ஒன்று மாத்திரமே தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. இதனால் ஒரு பிரஸ் இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுள்ளது. இந்த இரு பிரஸ் இயந்திரங்களும் 01 ஆம் 02 ஆம் இலக்கப் படங்களில் காணப்படுகின்றன.



படம் 1 - செயற்படாத பிரஸ் இயந்திரம்



படம் 2 - செயற்பட்டவாறிருக்கும் பிரஸ் இயந்திரம்

#### (ஆ) பொக்ஸ் பீடர் இயந்திரம் செயற்படாது போதல் (Box feeder)

----------------------------------------------------------------------------------------------------

எரகம தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பெதவி ஓடுகள் மற்றும் முதுன் ஓடுகள் என்பவற்றின் ஆரம்ப கட்டப் பாவனைக்குப் பயன்படுத்தப்படுவது Box feeder இயந்திரமாகும். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி பதப்படுத்தப்படும் களிமண் கலக்கப்பட்டு துண்டுகளாக வெட்டுப்பட்டு ரனமில் இயந்திரத்திற்குக் களிமண்ணை எடுத்துச் செல்லும் கன்வெயர் பெல்ட்டில் களி மண் இடப்படுகின்றது. இந்த இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுவதற்குத் தேவையான களிமண் ஒரேவாறு தொடர்ச்சியாக முன் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது. இந்த box feeder இயந்திரம் தற்போது பழுதடைந்துள்ளது. அத்தொழிலில் 2 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை

3 ஆம் படத்தில் நிருபணமாகின்றது. அதற்கமைய, தற்சமயம் இயந்திரத்தின் உற்பத்திக்கான பங்களிப்பு கிடைப்பதற்கில்லாததால் உற்பத்தியின் வினைத்திறன் வீழ்ச்சி அடைந்துள்ளது. அது புகைப்படத்தில் பின்வருமாறு காணப்படுகின்றது.



படம் 03 - தொழிலாளர்கள் மண்வெட்டியின் உதவியுடன் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

## (இ) இயற்கையான ஓடுகளைக் காய வைக்கும் கூடம்

---

உற்பத்தியாகும் நீர்த் தன்மையுடனான பச்சை ஓடுகள் (காயாத ஓடுகள்) அச்சுக்களில் இடப்பட்டு ஓடுகளைக் காயவைக்கும் கூடத்தில் உள்ள ராக்கைகளில் அடுக்கி வைக்கப்படுகின்றன. அதற்கென 236 ராக்கைகள் உள்ளன. கூடத்தில் உள்ள அந்த ராக்கைகளில் 25 உடைந்து சிதைந்து போயுள்ளன. அவை பழுதுபார்க்கப்பட வேண்டியனவாகும். 4 ஆம் 5 ஆம் புகைப்படங்கள் அதனைக் காட்டுகின்றன.



படம் - 4



படம் - 5


**(ஈ) தொழிற்சாலையின் கூரை பாதிக்கப்பட்டு சிதைந்து போயுள்ளமை**

-----------------------------------------------------------------------------------------------------------

தொழிற்சாலைக்குரிய உத்தியோகபூர்வ மனை மற்றும் தொழிற்சாலைக் கட்டிடம் அமைந்துள்ள காணி 34 ஏக்கர் விசாலமானதாகும். ஓடுகளது உற்பத்தியின் ஆரம்ப கட்டம் முதலாக இறுதி வரையான உற்பத்தி நடவடிக்கைகள் நடைபெறும் தொழிற்சாலையின் கூரையானது தகரத்தாலானது. அது பல இடங்களில் துருப்பிடித்து ஓட்டைகளுடன் காணப்படுகின்றது. இந்நிலைமை காரணமாக அநேக ஆண்டுகளாக மழைக்காலத்தின்போது மழை நீர் தொழிற்சாலையில் உட்புகுந்து உற்பத்திக்கான சிறு கருவிகள் துருப்பிடித்துள்ளன. தொழிற்சாலை வளாகம் அழிவடைந்தவாறுள்ளமையும், ஓட்டு உற்பத்தியின்போது ஓடுகளைக் காய வைப்பது தடையாக உள்ளமையும், ஊழியர்கள் பாதுகாப்பாக உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளமையும் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக இனங்காணப்படுகின்றன. 6 ஆம் 7 ஆம் படங்கள் இதனைக் காட்டுகின்றன.



படம் - 6



படம் - 7

**(உ) தொழிற்சாலைக்குச் சொந்தமான கமப் பண்ணையை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தாமை**

------------------------------------------------------------------------------------------------------------------------------

சனாதிபதி அலுவலகத்தின் 2018 செப்டம்பர் 05 ஆந் திகதிய சனாதிபதி சுற்றறிக்கை இலக்கம் PS/SD/NFPU/08/18 "தேசிய உணவு உற்பத்தி ஆண்டு - 2018" எனும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்காக வரிசை அமைச்சாகிய பொது முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சினால் குறித்த சுற்றறிக்கை கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரகமவில் அமைந்துள்ள 50 ஏக்கர் நெற் காணி (பயிர்ச்செய்கைக் காணி) 2018 மார்ச் 16 தொடக்கம் கணக்காய்வுத் தினமான 2019 செப்டம்பர் 25 வரை எதுவித பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்படாது கட்டாந்தரையாகக்

காணப்பட்டது. இதற்கமைய, கிடைப்பதற்குள்ள வளமானது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிராமை உறுதியாகியது. பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படாத காணி 8 ஆம் 9 ஆம் படங்களில் காணப்படுகின்றன.



படம் - 8



படம் - 9

**(ஊ) நன்னீர் மீன்செயற்திட்டத்தை அமுலாக்குதல்**

---

நன்னீர் மீன் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் பொருட்டு அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது அரச தொழிற்சாலைக்காணியில் 05 ஏக்கர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அறிவுரைப்படி தனியார் காணியினருக்கு குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் 2019 மே 02 ஆந் திகதியன்று அங்கீகாரம் வழங்கியிருந்தார். அச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரிடையே எழுத்துமூல உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. முதலீட்டாளர் செயற்திட்டத்தை ஆரம்பித்திருந்தார். மாதாந்தம் குத்தகை வாடகையாக ரூபா 15,000 வழங்குவதற்கு இணங்கிய அவரால் இதுவரை குத்தகை வாடகை செலுத்தப்படாதிருந்தது.

**(எ) வாகனப் பாவனை**

---

தற்சமயம் கூட்டுத்தாபனம் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு ஓட்டுத் தொழிற்சாலையான எரகம ஓட்டுத் தொழிற்சாலையின் நாளாந்த வருமானத்தை வங்கியிலிடுவதற்கு ஏறக்குறைய 12 கி.மீ தொலைவில் உள்ள அம்பாறை நகரையடைவதற்கு வாகனங்கள் அற்ற பின்தங்கிய வீதியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மேலும், கூட்டுத்தாபனத்திற்குரிய ஏறக்குறைய 232 ஏக்கர் காணியில் அத்துமீறிய காணிச் சுவீகரிப்பு தொடர்பான பரிசீலனை, (காணியைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிதல்)

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் காணப்படும் அத்துமீறிய மணல் அகழ்வுப் படகுகளது பரிசீலனை, தலைமை அலுவலகத்துடன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் விசேடமாக பகலிலும் இரவிலும் தொழிற்சாலை ஊழியர்கள் திடீர் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் தேவைப்படும் சகல போக்குவரத்துத் தேவைகள் தொழிற்சாலையில் மிகவும் குறைவாகவே காணப்படுவதுடன் 1991 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 51 ஸ்ரீ 8014 ஆம் இலக்க கெப் வண்டி மாத்திரமே தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ஏ) வனக் காணிகளைப் பயன்படுத்தாமை**

2012 மே 04 ஆந் திகதிய AM/IM/2018 ஆம் இலக்க விலை மதிப்புத் திணைக்களத்தின் ஊவா மற்றும் கிழக்கு மாகாண அலுவலகங்களால் வழங்கப்பட்ட விலைமதிப்பு அறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலையின் காணி, கட்டிடங்கள், இயந்திர சாதனங்களும் வாகனங்களும் ரூபா 42,650,000 கூட்டுத் தொகையாக மதிப்பீடு செய்யப்பட்டிந்தது. அந்த விலை மதிப்பில் உள்ளடங்கிய காணிகளது பெறுமதி ரூபா 14,150,000 ஆகும். கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏறக்குறைய 232 ஏக்கர் காணியில் 34 ஏக்கர் காணி ஓட்டு உற்பத்திக்கான களி மண்ணைப் பெறுவதற்கும் தொழிற்சாலையை நடாத்துவதற்கான காணியாகப் பயன்படுத்தப்படும் காணியைத் தவிர, எஞ்சிய பெருமளவு பயனுள்ள பணிகளில் காணி ஈடுபடுத்தப்படாதிருந்தது.

**(ஐ) பயன்படுத்தப்படமுடியாத வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்யாமை**

நிதி மற்றும் ஊடக அமைச்சால் வெளியிடப்பட்ட 2018 மார்ச் 17 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 01/2018 ‘‘அரசாங்கத்தின் நிதிசாரா சொத்து முகாமைத்துவம் - பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மோட்டார் வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்தல்’’ சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள சகல வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்க வேண்டுமாயினும், கூட்டுத்தாபனத்தின் எரகம தொழிற்சாலையில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த 03 வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாதிருந்தன. 10, 11, 12 ஆம் இலக்க படங்கள் இதனைக் காட்டுகின்றன.



படம் 10 - 41 ஸ்ரீ 7940 லொறி



படம் 11 - 36 ஸ்ரீ 2451 டிறக்டர்



படம் 12 - 47 - 4192 டிப்பர்

**(ஒ) தொழிற்சாலைக் காணியை அத்துமீறிக் கைப்பற்றுதல்**

-----------------------------------------------------------------------------------------

எரகம தொழிற்சாலைக்குரிய பயிர்ச்செய்கைக் காணியில் 03 ஏக்கர், 01 றூட், 22 பர்ச்சர்ஸ் காணி நபர் ஒருவரால் அத்துமீறியவாறு சுவீகரிக்கப்பட்டுள்ளமை கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட எழுத்துமூல உறுதிப்படுத்தலின் மூலம் உறுதி செய்யப்பட்டது. 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று நடைபெற்றவாறுள்ளது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியின் பாதுகாப்பு போதியளவு அமையாதுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

**(ஓ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை வெளி நபர்களுக்கு வழங்குதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

இந்த ஓட்டுத் தொழிற்சாலையில் பணிபுரிந்த 100 ஊழியர்கள் 2012 ஆம் ஆண்டில் தன்னிச்சையாக ஓய்வுபெறும் இழப்பீட்டுத் திட்டத்திற்கமைய (VRS) ஓய்வு பெற்றிருந்தனர். இத் தொழிற்சாலைக் காணி, உற்பத்திக்கான மூலப்

பொருளாக களி மண் மற்றும் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியையும் கட்டிடங்களையும் பயன்படுத்தி 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சந்தஹிறு சேயவிற்கு செங்கற்களை உற்பத்தி செய்வதற்கு கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரியால் சட்டபூர்வ உடன்படிக்கை எதுவுமின்றி இராணுவத்திற்கும் சிவில் பாதுகாப்பு படையணிக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்திற்குரிய களி மண் வளம் மற்றும் 10 கட்டிடங்கள் என்பன இராணுவத்தாலும் சிவில் பாதுகாப்புப் படையணியாலும் தொடர்ச்சியாக இற்றை வரை கட்டணம் எதுவுமில்லாது பயன்படுத்தப்படுவதுடன் சொத்துப் பாதுகாக்கப்படுவது மாத்திரமேயன்றி கூட்டுத்தாபனத்திற்கு அதன் மூலம் நிதிசார் நலன் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இதற்கமைய, கூட்டுத்தாபனத்திற்குரிய சொத்துக்கள் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனுடனும் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 நிலைமைக் கட்டுப்பாடு

#### (அ) உற்பத்திகளது நிலைமையைப் பரிசீலித்தல்

தொழிற்சாலையின் தற்போதைய முகாமையாளர் கணக்காய்வுக் களப் பரிசோதனையின்போது கணக்காய்விற்கு அளித்த விளக்கத்தின் பிரகாரம், ஓட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பிரதான மூலப்பொருளாகிய களி மண்ணில் அடங்கிய மணலின் யோக்கியதையானது முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வரும் இலகு நிலை ஆராய்ச்சி உபகரணத்தினது உதவியுடனேயே முகாமையாளரின் பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்றது. இதற்குப் புறம்பாக, ஓடு ஒன்றினது நிறை மற்றும் அது போதியளவு காய விடப்பட்டதா என்பதையும் பணியாற்றிவரும் தற்போதைய தொழிற்சாலை முகாமையாளர் தனது அனுபவத்தாலும் ஆற்றலாலும் இப்பணிகளை ஆற்றி வருவது அவதானிக்கப்பட்டது. அதற்கென திருத்தங்களுடனான ஆராய்ச்சி மற்றும் நிலைமைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிமுகஞ் செய்து வைக்கப்படவில்லை. பயிற்றப்பட்ட மற்றும் தகைமைகளும் ஆற்றலும் உடைய உத்தியோகத்தர் ஒருவர் அதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்களால் உற்பத்தி செய்யப்படும் ஓடுகளது தரத்தை ஒரு சீராகப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் உற்பத்தி பல்வேறு வகையில் அமையுமாறு செய்யப்படுதல் மற்றும் புதிய கோணங்களில் உற்பத்தியை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உற்பத்தி ஆராய்ச்சியும் பயிற்சியும்**

-----------------------------------------------------------

கூட்டுத்தாபனத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு ஒன்று இருக்கவில்லை. 2012 மார்ச் 31 ஆந் திகதி தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டம் அமுலாகியதன் பின்னர் உற்பத்தி மற்றும் விற்பனை சம்பந்தமாக தொடர்ச்சியாக முறையான ஊழியர் பயிற்சி முறைமையோ அல்லது ஊழியர் தூண்டுகோல் முறைமையோ மேற்கொள்ளப்படவில்லை. தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டம் அமுலாகியதன் பின்னரும் தொழிற்சாலையில் உற்பத்தி நடைபெறும்போதும், ஊழியர்களது பயிற்சியிலும் ஆராய்ச்சியிலும் கனவம் செலுத்தப்படாததால் உற்பத்திகளது வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வத்தன்மை என்பன மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதும் கிடைப்பதற்குள்ள வளம் உயரளவில் பயன்படுத்தப்படாமையும் அவதானிக்கப்பட்டன.

**(இ) ஊழியர்களது பாதுகாப்பு**

-----------------------------------------

ஓடுகளது உற்பத்தி நடவடிக்கைகளுக்கான மூலப்பொருட்களை வழங்குவது முதலாக பூர்த்தியான பொருட்களை வகைப்படுத்தும் வரையிலான நிகழ்வுகளின்போது ஒவ்வொரு கட்ட நடவடிக்கைகளையும் கருத்திற் கொள்ளுமிடத்து தொழிற்சாலை ஊழியர்கள் / உத்தியோகத்தர்கள் ஆகியோர் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டிய நிலைமை இருப்பது அவதானிக்கப்பட்டது. அவர்களது பாதுகாப்பு நலன்புரி சம்பந்தமாக தொழிற்சாலை வளாகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்களால் ஊழியர்களது பாதுகாப்பு, உற்பத்திகளது வினைத்திறன் மற்றும் உழியர்களது முயற்சி என்பன நேரடித் தாக்கங்களுக்கு உள்ளாவது அவதானிக்கப்பட்டது.

**3.1.4 உற்பத்திக் கிரயமும் செயற்பாட்டு நடவடிக்கைகளும்**

------------------------------------------------------------------------------------------

**(அ) உற்பத்திக் கிரயத்தை கணிப்பிடுதல்**

-----------------------------------------------------------

எரகம தொழிற்சாலையில் உற்பத்தியாகும் ஓடு ஒன்றினது விலையைத் (உற்பத்தி கிரயம்) தீர்மானிக்கையில் உற்பத்திக்குத் தேவைப்படும் பிரதான மூலப்பொருளாகிய தொழிற்சாலைக் காணியில் பெறப்படும் களிமண்ணின் விலை மற்றும் தொழிற்சாலையின் இயந்திர சாதனங்களின் தேய்மானம் என்பன உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்படுதல் மற்றும் நேரடி உற்பத்தி மேந்தலைச் செலவினத்தை இனங்கண்டு உள்ளடக்காது ஓடு ஒன்றினது உற்பத்திக் கிரயம்

கணிப்பிடப்படுவதால் உற்பத்திக் கிரயம் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் நெடுங்காலமாக இழப்புக்குள்ளானமைக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இந்த உற்பத்திக் கிரயக் கணிப்பீட்டுக்கு, கிரயம் கணக்கீட்டுக் கிரய முறைமை (Costing Method) எதனையும் கூட்டுத்தாபனம் கடைப்பிடித்திருக்கவில்லை.

**(ஆ) உற்பத்தியைப் பல்வகைப்படுத்தல்**

---------------------------------------------------------

எரகம ஓட்டுத்தொழிற்சாலை 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அன்று முதல் இன்று வரை 60 ஆண்டுகளாக பெதலி ஓடுகளையும் முதுன் ஓடுகளையும் உற்பத்தி செய்தலைத் தவிர, போட்டியை எதிர்கொள்வதற்கும் காலத்துக்கேற்ற தேவையின் பிரகாரமும் உற்பத்தி உருவாக்கத்தில் மாற்றம் செய்வதற்கும் இலக்குச் சந்தையை (Target Market) நோக்காகக் கொண்டு உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தவில்லை. இலங்கையில் களிமண் மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகளை மேம்படுத்தும் விரிவான நோக்கத்துடன் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய 60 ஆண்டு கால செயற்பாட்டின்போது கூட்டுத்தாபனத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ பணிகளை ஆற்றிய கூட்டுத்தாபன நிர்வாகத்தினரால் மூலநோக்கங்களையும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளையும் தவறின்றி இனங்காண்பதற்கும் புதிய உற்பத்தியை நோக்கிச் செல்வதற்கும் இயலாது போனது. அது கூட்டுத்தாபனத்தின் தற்போதைய வினைத்திறனற்ற நிலைமைக்கு பெரும் தாக்கத்தை விளைவித்திருந்தது. ஓட்டுக் கைத்தொழில் மக்களின் விருப்பு, வெறுப்பு மற்றும் புதிய உற்பத்திகளை அறிமுகஞ் செய்வதற்கும் அதற்கேற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தவும் களி மண்ணுடன் இணைந்த உற்பத்திகளை உருவாக்கவும் கூட்டுத்தாபனத்தைச் செயற்படுத்த முகாமைத்துவம் தவறியமையால் கூட்டுத்தாபனமானது சந்தையில் போட்டியுடனான உற்பத்தியாளராக வெற்றிகரமாக இயங்க முடியாது போனது.

### 3.1.5 விற்பனை

----------------


**(அ) எரகம தொழிற்சாலையின் ஓட்டு விற்பனையை மதிப்பாய்வு செய்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------

கூட்டுத்தாபனம் ஓட்டுத் தொழிற்சாலைகளை ஆரம்பித்த நாள் முதலாக இற்றைவரையான காலப்பகுதி வரை தொடர்ச்சியாக ஓடுகளை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்ட ஒரேயொரு ஓட்டுத் தொழிற்சாலை இதுவாகும்.

எனினும், கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் கீழ் வரும் ஏனைய தொழிற்சாலைகளதும் எரகம ஓட்டுத் தொழிற்சாலையினதும் ஓட்டு விற்பனைக்கு ஆரம்பத் திட்டங்களைத் தயாரித்து அத்திட்டத்தின் அடிப்படையில் வருடாந்தம் ஓட்டு விற்பனை நடைபெறவில்லை. அதற்கமைய, எரகம தொழிற்சாலையின் கடந்த 04 ஆண்டுகளினதும் 2019 யூலை 31 வரையான காலப்பகுதியின்போதுமான பெதலி ஓடுகளதும் முதுன் ஓடுகளதும் விற்பனை பின்வரும் அட்டவணையின் மூலமும் வரைபடத்தின் மூலமும் நிரூபணமாகின்றது.

| **ஆண்டு** | **பெதலி ஓடு** | | **முதுன் ஓடு** | |
|---|---|---|---|---|
| | **ஓடு** | **ரூபா** | **ஓடு** | **ரூபா** |
| 2015 | 1424198 | 54,550,794 | 23930 | 1,335,915 |
| 2016 | 1720380 | 70,514,270 | 39974 | 2,433,455 |
| 2017 | 1531141 | 68,901,345 | 53518 | 3,478,670 |
| 2018 | 1145508 | 51,547,860 | 38349 | 2,492,685 |
| 2019.07.31* | 816585 | 36,746,325 | 17442 | 1,133,730 |




* 2019 யூலை 31 இல் உள்ளவாறான புள்ளி விபரத் தரவு

(i) மேற்படி அட்டவணை மற்றும் வரைபடம் என்பவற்றின் பிரகாரம் எரகம தொழிற்சாலையில் பெதலி ஓட்டு விற்பனையின் பெறுமதி 2015 ஆம் ஆண்டில் ரூபா 54,550,794 ஆகவிருந்தது. 2016 ஆம் ஆண்டில் அது ரூபா 70,514,270 வரை அதிகரித்திருந்தது. எனினும், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 யூலை 31 வரையான காலப்பகுதியின்போது கூட்டுத்தாபனத்தின் பெதலி ஓட்டு விற்பனைப் பெறுமதி படிப்படியாகக் குறைவடைந்த போக்கு அவதானிக்கப்பட்டது.

(ii) 2015 ஆம் ஆண்டின்போது ஓடுகளது விற்பனைப் பெறுமதி ரூபா 1,335,915 ஆகவிருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அது படிப்படியாக அதிகரித்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 3,478,670 ஆகியது. எனினும், தொழிற்சாலையின் முதுன் ஓட்டு விற்பனை 2017 ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்த போக்கு அவதானிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் அது ரூபா 2,492,685 ஆகியுமிருந்தது.

**(ஆ) விற்பனை முகவர்கள் மூலம் விற்பனை செய்தல்**

எரகம தொழிற்சாலையில ஓடுகளை விற்பனை செய்வதற்கு விற்பனை முகவர்களைப் பயன்படுத்தும் நடவடிக்கை கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2005 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின்போது அவ்வப்போது 07 நபர்கள் விற்பனை முகவர்களாக இருந்ததுடன், தற்போது அவர்களுள் 06 விற்பனை முகவர்கள் கூட்டுத்தாபன விற்பனை முகவர்களாகப் பணியாற்றியவாறுள்ளனர். 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 யூன் வரையான எரகம தொழிற்சாலையின் ஓட்டு விற்பனை வருமானத்தைப் பகுப்பாய்வு செய்கையில் 2018 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை வருமானத்தில் 76.88 சதவீதமும 2019 யூன் வரையான காலப்பகுதியின்போது மொத்த விற்பனை வருமானத்தில் 77.97 சதவீதமும் விற்பனை முகவர்களால் பெறப்பட்டதாகும் என்பது பின்வரும் அட்டவணையின் மூலம் அவதானிக்கப்பட்டது.

| விற்பனை முகவரின் பெயர் | விற்பனை முகவராகிய திகதி | விற்பனை வருமானம் | |
|---|---|---|---|
| | | 2018 ஆம் ஆண்டு ரூபா | 2019 யூன் வரை ரூபா |
| M.A டைல் | 2005.05.01 | 7,721,293 | 4,308,440 |

| | | | |
|---|---|---|---|
| A.A கபீர் | 2005.05.01 | 6,337,840 | 5,610,156 |
| M.I நாகர்தம்பி | 2005.05.01 | 2,802,968 | 1,487,868 |
| M.I மீரான் | 2008.01.01 | 9,570,537 | 4,902,537 |
| A.M ஹனீபா | 2015.12.01 | 1,121,700 | - |
| S.M.றுக்ஷான் | 2016.11.25 | 13,253,015 | 7,582,117 |
| I.L.M றூபயின் ஸ்மைல் மோட்டர்ஸ் | 2018.03.05 | 740,987 | - |
| விற்பனை முகவர்களது மொத்த வருமானம் | | 41,548,340 | 23,891,118 |
| மொத்த ஓட்டு விற்பனை வருமானம் | | 54,040,545 | 30,639,952 |
| மொத்த ஓட்டு விற்பனை வருமானத்தில் முகவர் விற்பனை வருமானம், சதவீதமாக | | 76.88 | 77.97 |

மேற்படி நிலைமையைக் கருத்திற் கொள்ளுமிடத்து விற்பனைத் துறையில் ஈடுபட்டுள்ள உள்ளூர் விற்பனை முகவர்கள் ஏனைய தொழிற்சாலைகளிலும் தீவடங்கிலுமாக நியமிக்கப்படுதல் முக்கிய சாதனமாக அமையலாம் என அவதானிக்கப்பட்டது.

**(இ) அரசாங்கத்துறை நிறுவனங்களுக்குக் கழிவு வழங்குதல்**

---

2016 யூலை 20 ஆந் திகதியன்று அச்சமயம் இருந்த தகுதிவாய்ந்த உத்தியோகத்தரால் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட 06 அரச நிறுவனங்களுக்கு 10 சதவீதக் கழிவு வழங்கியமை கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அமையவில்லை. அதற்கமைய, அந்த விற்பனை உபாயத்தை தொழிற்சாலையின் ஓட்டு விற்பனைக்கு அமுல்படுத்த முடியாதிருந்தது. எனினும், காலத்தின் தேவைக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் விற்பனையை அதிகரிப்பதற்கும் தற்போதுள்ள பொருளாதார சக்தியின் அடிப்படையில் கூட்டுத்தாபன உற்பத்தியை விற்பனை செய்வதற்கும் இந்த விற்பனை உபாயத்தைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஈ) கழிவுடன் ஓடுகளை விற்பனை செய்தல்**

---

விற்பனை முகவர்களால் எரகம தொழிற்சாலையில் ஓடுகள் விற்பனை செய்யப்படும் போது 2016 ஆம் ஆண்டில் 5 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டளவில் அது 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2019 யூன் 13 தொடக்கம் இந்தத் தொழிற்சாலையின் ஓட்டுக் கையிருப்பு குறைவடைந்தமை காரணமாக சகல விற்பனை முகவர்களுக்கும் வழங்கப்படும் கழிவை 5 சதவீதத்தால் குறைப்பதற்கும் சகல வாடிக்கையாளர்களுக்கும் கழிவு

இல்லாது ஓடுகளை விற்பனை செய்வதற்கும் கூட்டுத்தாபன நிர்வாகத்தினர் தீர்மானம் மேற்கொண்டிருந்தனர். மேற்கூறியவாறு விற்பனை முகவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் கழிவுடன் ஓடுகளை விற்பனை செய்வது ஒருவகை விற்பனை உபாயமாகியபோதும், தொழிற்சாலையின் உற்பத்திப் பொருட்களை வீடமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து அதன்மூலம் விற்பனையை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

**(உ) உற்பத்தியாகிய ஓடுகளை விற்பனை செய்யும் உபாய மார்க்கத்தில் உள்ள நலிவுகள்**

---

தற்சமயம் கூட்டுத்தாபனத்திலும் எரகம தொழிற்சாலையிலும் பயன்படுத்தப்படும் விற்பனை உபாயமார்க்கமாக முகவர்களினூடாக விற்பனையும் கழிவுடனான விற்பனையும் மாத்திரமே நடைபெறுகின்றன. வருடாந்த விற்பனைக்கான விற்பனைத் திட்டம் தயாரிக்கப்படுவதில்லை. விற்பனை மேம்பாட்டிற்கான நவீன விற்பனை உபாய மார்க்கங்கள் கடைப்பிடிக்காமை அவதானிக்கப்பட்டது.

**3.2 தற்காலிகமாக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்**

---

கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 04 தொழிற்சாலைகளது உற்பத்தி நடவடிக்கைகள் 2018 சனவரி 25 தொடக்கம் அச்சமயம் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த தகுதிவாய்ந்த உத்தியோகத்தரது அறிவுறுத்தலின் பிரகாரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. அவ்வாறு தற்காலிகமாக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட 04 தொழிற்சாலைகள் மஹியங்கனை, யட்டியன, உஸ்வெவ, பிங்கிரிய என்பனவாகும். இத்தொழிற்சாலைகளது உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு பிரதான காரணிகளாக அமைந்தவை பின்வருமாறு.

(i) அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் எஸ்பொஸ்டொஸை தடை செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் நீக்கப்பட்டதால் ஓடுகளது விற்பனை பாதிப்படைந்தமை.

(ii) உற்பத்தியாகிய பெருமளவு ஓடுகளது கையிருப்பு விற்பனையின்றி அதிகரித்ததால் கூட்டுத்தாபனம் நிதி நெருக்கடிக்குள்ளாகியமை.

(iii) இராணுவத்தினரையும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களையும் பயன்படுத்தி ஓடுகளை உற்பத்தி செய்தமையால் உயர்தரத்தில் அமையாத ஓடுகள் உற்பத்தியானதுடன் விற்பனையாகிய ஓடுகளை வாடிக்கையாளர்கள் நிராகரித்தமையும் காரணமாக அமைந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட தற்காலிகமாக உற்பத்தி இடைநிறுத்தப்பட்ட தொழிற்சாலைகளின் உற்பத்திச் சுற்றோட்டம் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| **தொழிற்சாலை** | **ஓடுகளது சுற்றோட்டம் (நாளாந்தம்)** | | | |
|---|---|---|---|---|
| **உற்பத்தி செய்யப்பட்ட ஓட்டு வகை** | **மஹியங்கனை** | **உஸ்வெவ** | **யட்டியன** | **பிங்கிரிய** |
| பெதிலி ஓட்டுப் பீலிகள் 1 | 5,800 | 11,600 | 5,600 | 4,000 |
| பெதிலி ஓட்டுப் பீலிகள் 2 | 5,800 | - | - | - |
| செவன விசேட ஓடுகள் | 5,800 | - | - | - |
| புதிய செவன ஓடுகள் | 5,800 | - | - | - |
| முதுன் ஓடுகள் | 890 | 1,024 | 950 | 1,025 |
| மாளிகை ஓடுகள் | 2,500 | - | | - |
| சிங்கள கொகு ஓடுகள் | | | 3,000 | 2,500 |
| எஸ்பெஸ்டோஸ் கலந்த ஓடுகள் | - | 1,024 | - | 2,500 |

### 3.2.1 இயந்திரங்களதும் ஏனைய வசதிகளதும் பயன்பாடு

#### (அ) இயந்திர சாதனங்களின் சுத்திகரிப்பு

2018 சனவரி 25 தொடக்கம் தற்சமயம் வரை ஓராண்டிற்கு மேலாக உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அந்தத் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திர சாதனங்களை சுத்திகரிப்பதற்கான அவசியம் நிலவியது.

#### (ஆ) சொத்துக்களைக் குறைவாகப் பயன்படுத்துதல்

தற்காலிகமாக உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ள தொழிற்சாலைகளது சொத்துக்கள் தொடர்பாக விலைமதிப்புத்

திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்குரிய சொத்துக்களின் சந்தைப் பெறுமதி ரூபா 156,171,000 கூட்டுத் தொகையாகும். 2018 சனவரி 25 தொடக்கம் இத்தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக பயன்படுத்தப்படாமல் இருந்தன. மேலும், அந்தச் சொத்துக்களது பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவுமில்லை. பின்வரும் அட்டவணையில் விபரம் காணப்படுகின்றது.

| **தொழிற்சாலை** | **மதிப்பீடு செய்யப்பட்ட திகதியும் இலக்கமும்** | **மதிப்பிடப்பட்ட சொத்தின் விபரம்** | **மதிப்பிடப்பட்ட பெறுமதி** |
|---|---|---|---|
| | | | **ரூபா** |
| மஹியங்கனை | 2006.10.11 பது/இன்/2728 | காணி, கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் | 57,250,000 |
| யட்டியன | 2011.10.04 மாத/ஈ/வீ/1084 | தொழிற்சாலை வளாகத்தில் உள்ள சொத்துக்களின் பெறுமதி | 35,000,000 |
| உஸ்வெவ | 2007.07.21 ஆர்டீ/எல்எம்/3768 | காணி, கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள், தளபாடங்கள் மற்றும் வாகனங்கள் | 26,500,000 |
| பிங்கிரிய | 2011.05.11 குரு/இவ/2479/2480 | தொழிற்சாலையின் சகல சொத்துக்கள் | 37,421,000 |
| மொத்தம் | | | 156,171,000 |

**(இ) காணிகளைச் சட்டபூர்வமாகச் சுவீகரிக்காமை**

கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணச் சான்றுகளுக்கமைய தற்காலிகமாக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட 03 தொழிற்சாலைகளுக்குரிய காணி 75 ஏக்கர், 01 றூட், 34 பர்ச்சர்ஸ் ஆகும். இக்காணியினது சட்டபூர்வ உரித்து 2019 யூலை வரை

கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்படாதிருந்தது. மேலும், இத்தொழிற்சாலைகளுக்குரிய காணியை ஆக்கபூர்வமாக முதலீடு செய்யும் பணி மேற்கொள்ளப்படவில்லை. காணியினது விபரம் வருமாறு.

| தொழிற்சாலை | உரித்தை உறுதி செய்யும் ஆவணம் | காணியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பர்ச்சஸ் |
| யட்டியன | 1980.10.21 ஆந் திகதிய 1/80 ஆம் இலக்க நில அளவைப் பத்திரம் | 06 | 01 | 11.5 |
| யட்டியன | 1963.09.06 ஆந் திகதிய 13751 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | 21 | 02 | 05 |
| யட்டியன | 1971.04.29 ஆந் திகதிய 263 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | 19 | 02 | 18.9 |
| உஸ்வெவ | அ.க.பி 413 ஆம் இலக்க நில அளவைப் பத்திரம் | 16 | 03 | 29 |
| பிங்கிரிய | 1980.03.19 ஆந் திகதிய 1591 ஆம் இலக்க நில அளவைப் பத்திரம் | 03 | - | 17 |
| பிங்கிரிய | 1980.03.19 ஆந் திகதிய 1592 ஆம் இலக்க நில அளவைப் பத்திரம் | - | - | 9.5 |
| | 1978.07.07 ஆந் திகதிய 3/63/458 ஆம் இலக்க உயர்தர பிரதியிடுதல் | 07 | 03 | 23 |
| மொத்தம் | | 72 | 11 | 113.9 |

**(ஈ) வாகனங்களை கைதவிர்ப்புச் செய்தல்**

நிதி மற்றும் ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2018 மார்ச் 17 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை இலக்கம் 01/2018 க்கமைய “அரசாங்க

நிதிசாரா சொத்துக்களது முகாமைத்துவம், பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ள வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்தல்'' எனும் சுற்றறிக்கைப் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாதிருக்கும் சகல வாகனங்களும் 2018 யூன் 30 க்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்க வேண்டுமாயினும், தற்காலிக உற்பத்தி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த 04 தொழிற்சாலைகளில் இருந்த 11 பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்த வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாதிருந்தன. அவை இணைப்பு 03 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**(உ) தொழிற்சாலைக் காணியை அத்துமீறிக் கைப்பற்றுதல்**

--------------------------------------------------------------------------------------------

மஹியங்கனை ஓட்டுத் தொழிற்சாலைக்குரிய காணி நெடுங்காலமாக பிரதேசவாசிகளால் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட எழுத்துமூல ஆவணத்தின் பிரகாரம் ''தொழிற்சாலைக் காணியில் 125 க்கு மேற்பட்ட குடும்பங்கள் அத்துமீறி வசித்து வருவதாகவும், இப்பிரச்சினை 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டது எனவும்'' உறுதி செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு அத்துமீறிக் குடியிருப்போரை அகற்றுவதற்கு இற்றைவரை கூட்டுத்தாபன முகாமைத்துவத்தால் இயலாது போயிருந்ததுடன், காணிகளைக் கைப்பற்றியவர்களுக்கும் கூட்டுத்தாபனத்திற்குமிடையே பல வழக்குகள் விசாரிக்கப்பட்டவாறுமிருந்தன.

**(ஊ) தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்களை வெளி நபர்களுக்கு வழங்குதல்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த ஓட்டுத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த ஊழியர்கள் 2012 ஆம் ஆண்டில் தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் (VRS) இழப்பீடு வழங்கப்பட்டு ஓய்வு பெற்றிருந்தனர். அத்தொழிற்சாலைகளின் காணிகளும் கட்டிடங்களும் சந்தஹிறு சேயவுக்கு செங்கற்களை உற்பத்தி செய்வதற்கு சட்டபூர்வ உடன்படிக்கை எதுவுமின்றி அரசாங்க இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, தற்போதும் மஹியங்கனவிலும் பிங்கிரியவிலும் உள்ள தொழிற்சாலைக்குரிய 16 கட்டிடங்கள் எதுவித நிதிசார் பயனுமின்றி வான்படையினரால் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

**(எ) தொழிற்சாலை முகாமையாளரின் உத்தியோகபூர்வ மனை பயன்படுத்தப்படல்**

---

யட்டியன தொழிற்சாலை அமைந்துள்ள வயர்லஸ்வத்த எனும் காணி காலணித்துவ காலத்தில் இங்கிலாந்தால் நிர்வகிக்கப்பட்டபோது இங்கிலாந்திற்கும் இலங்கைக்குமிடையே தகவல் பரிமாறற் நிலையமாகப் பயன்படுத்தப்பட்டதாகும். ஆங்கிலேயர் இலங்கையிலிருந்து செல்லும் வரை பயன்படுத்திய பங்களா அவ்விடத்தில் இருந்தது. அந்த பங்களாவானது பின்னர் தொழிற்சாலை முகாமையாளரின் உத்தியோகபூர் மனையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. வரலாற்று பெறுமதி வாய்ந்த அந்த உத்தியோகபூர்வ மனை தற்சமயம் பயன்படுத்தப்படாதுள்ளது. கட்டிடம் அழிவடைந்தவாறு உள்ளமை அவதானிக்கப்பட்டது. 13 ஆம் 14 ஆம் படங்கள் யட்டியன தொழிற்சாலையின் பயன்படுத்தப்படாத உத்தியோகபூர்வ மனைகளைக் காட்டுகின்றன.


படம் - 13


படம் - 14

### 3.2.2 உற்பத்திக்கான களிமண் முடிவடைதல்

---

பிங்கிரிய தொழிற்சாலைக்குக் களி மண்ணைப் பெற்ற ‘‘அஸ்வெத்தும’’ எனும் இடத்தில் களிமண் முடிவடைந்துள்ளது. புதிதாக உற்பத்தியை ஆரம்பிப்பதாயின் பிரதான மூலப் பொருளான களிமண்ணை வெளியிலிருந்து பெறவேண்டிய அவசியம் நிலவுகின்றது.

### 3.2.3 தொழிற்சாலைகளின் ஓட்டு உற்பத்தி

---

தற்காலிகமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளில் 2017 ஆம் ஆண்டில் 2,410,552 ஓடுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. அந்த உற்பத்தியானது 2018 ஆம் ஆண்டளவில் 182,308 ஓடுகளாகக் குறைவடைந்திருந்தன. தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் 2018 சனவரி 25 தொடக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. எஸ்பெஸ்டொஸ்க்கான அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் 2018 தொடக்கம் நீக்கப்பட்டதால்

பிரதியீட்டுப் பொருளாக ஓடுகளின் உற்பத்தி 2017 க்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டளவில் 2,228,244 ஓடுகளாக குறைவடைந்திருந்தன. அதற்கமைய, தொழிற்சாலை இயந்திரங்களைப் பயன்படுத்தி 2018 சனவரி 25 ஆந் திகதியின் பின்னர் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தியில் ஈடுபட முடியவில்லை. உற்பத்தி விபரம் வருமாறு.

| ஆண்டு | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|
| ஓடுகளது உற்பத்தியின் மொத்த எண்ணிக்கை | 2,410,552 | 182,308 | - |

### 3.2.4 விற்பனை

கூட்டுத்தாபனம் தற்காலிகமாக உற்பத்தியை இடைநிறுத்திய 04 தொழிற்சாலைகளது ஓட்டு விற்பனை, உற்பத்திக் கிரயம் மற்றும் மொத்த இலாபம் என்பன பின்வரும் அட்டவணையில் உள்ளது.

| ஆண்டு | விற்பனைப் பெறுமதி | உற்பத்திக் கிரயம் | மொத்த இலாபம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2017 | 75,271,385 | 28,934,355 | 46,337,030 |
| 2018 | 16,115,499 | 9,334,090 | 6,781,409 |
| 2019 | 9,523,401 | 5,857,417 | 3,665,984 |
| மொத்தம் | 100,910,285 | 44,125,862 | 56,784,423 |

#### (அ) ஓடுகளது விற்பனை

கூட்டுத்தாபனம் உற்பத்தியைத் தற்காலிகமாக இடைநிறுத்திய 04 தொழிற்சாலைகளின் 2017 ஆம் ஆண்டினது மொத்த விற்பனைப் பெறுமதி ரூபா 75,271,385 ஆகும். அவ்விற்பனைப் பெறுமதி 2018 ஆம் ஆண்டளவில் ரூபா 16,115,499 வரை ரூபா 59,155,886 அதாவது, 78 சதவீத வீழ்ச்சிக்குள்ளானது. 2019 யூலை 31 இல் உள்ளவாறான ஓட்டு விற்பனைப் பெறுமதி ரூபா 9,523,401 ஆகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 யூலை 31 வரையிலும் ஓட்டு விற்பனையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒரு ஓட்டினது உற்பத்திக் கிரயம், விற்பனை விலை மற்றும் இலாபம் என்பவற்றைத் தீர்மானித்தல்**

---

கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளது உற்பத்திக் கிரயம், விற்பனை விலை மற்றும் இலாபம் என்பன பரிசீலிக்கப்பட்டன. அதற்கமைய, எரகம தொழிற்சாலையில் உற்பத்தியாகும் ஓடு ஒன்றினது விலையைத் தீர்மானிக்கையில் உற்பத்திக்குத் தேவைப்படும் பிரதான மூலப்பொருளாக களிமண்ணின் விலையும் இயந்திர சாதனங்களது தேய்மான கிரயமும் உள்ளடக்கப்படாது தீர்மானிக்கப்பட்ட விலையில் இலாப வரம்பொன்றைச் சேர்த்து விற்பனை விலை கணிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ஓடு ஒன்றினது விலையானது விற்பனை விலையாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஏனைய தொழிற்சாலைகளிலும் மேற்கூறியவாறு கணிப்பிடப்பட்ட விலையானது விற்பனை விலையாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏனைய தொழிற்சாலைகளுக்கு அந்த விலையானது ஆக்கபூர்வமான விலையாக அமையவில்லை. மேலும், எரகம தவிர ஏனைய தொழிற்சாலைகளுக்குக் கட்டணமின்றி பிரதான மூலப்பொருள் கிடைக்காமையும், பிரதான மூலப்பொருளாகிய களி மண் தொழிற்சாலைக் காணியில் கிடைத்தபோதும், அதற்கான தரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு களிமண்வகையை (மஞ்சள் களிமண்) கலக்க வேண்டி ஏற்படுவதாலும் மேலதிக கிரயம் செலவாகியிருந்தது. மேற்கூறியவாறு ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஓடு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு வெவ்வேறு உற்பத்திக் கிரயம் ஏற்பட்டபோதும், சமமான விற்பனை விலையே பயன்படுத்தப்படுவதால் ஓடு ஒன்றினது இலாபம் மற்றும் இலாப சதவீதம் என்பன மாற்றமடைந்தமை பின்வரும் அட்டவணைகளில் காணப்படுகின்றன.

**பெதலி ஓடு** I

| தொழிற்சாலை | பெதிலி ஓடு | கிரயம் | விற்பனை விலை | ஒரு ஓட்டினாலான இலாபம் | விற்பனை விலையிலான இலாபம், சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| எரகம | i | 19.63 | 45.25 | 25.62 | 56.62 |
| உஸ்வெவ | i | 28.67 | 45.25 | 16.58 | 36.64 |
| மஹியங்கனை | i | 26.9 | 45.25 | 18.35 | 40.55 |
| யட்டியன | i | 22.5 | 45.25 | 22.75 | 50.28 |
| பிங்கிரிய | i | 31.82 | 45.25 | 13.43 | 29.68 |

## பெதிலி ஓடு II

| தொழிற்சாலை | பெதிலி ஓடு | கிரயம் | விற்பனை விலை | ஒரு ஓட்டினாலான இலாபம் | விற்பனை விலையிலான இலாபம், சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| எரகம | ii | 19.63 | 28.65 | 9.02 | 31.48 |
| உ஼ஸ்வெவ | ii | 28.67 | 28.65 | -0.02 | -0.07 |
| மஹியங்கனை | ii | 26.9 | 28.65 | 1.73 | 6.04 |
| யட்டியன | ii | 22.5 | 28.65 | 6.15 | 21.47 |
| பிங்கிரிய | ii | 31.82 | 28.65 | -3.17 | -11.06 |

## முதுன் ஓடு I

| தொழிற்சாலை | முதுன் ஓடு | கிரயம் | விற்பனை விலை | ஒரு ஓட்டினாலான இலாபம் | விற்பனை விலையிலான இலாபம், சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| எரகம | i | 21.92 | 65.25 | 43.33 | 66.41 |
| உ஼ஸ்வெவ | i | 33.4 | 65.25 | 31.85 | 48.81 |
| மஹியங்கனை | i | 29.95 | 65.25 | 35.30 | 54.10 |
| யட்டியன | i | 35.35 | 65.25 | 29.90 | 45.82 |
| பிங்கிரிய | i | 49.55 | 65.25 | 15.70 | 24.06 |

## முதுன் ஓடு II

| தொழிற்சாலை | முதுன் ஓடு | கிரயம் | விற்பனை விலை | ஒரு ஓட்டினாலான இலாபம் | விற்பனை விலையிலான இலாபம், சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| எரகம | ii | 21.92 | 45.95 | 24.03 | 52.30 |
| உ஼ஸ்வெவ | ii | 33.4 | 45.95 | 12.55 | 27.31 |
| மஹியங்கனை | ii | 29.95 | 45.95 | 16.00 | 34.82 |
| யட்டியன | ii | 35.35 | 45.95 | 10.60 | 23.07 |
| பிங்கிரிய | ii | 49.55 | 45.95 | -3.60 | -7.83 |

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணைகளின் மூலம் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 05 தொழிற்சாலைகளது ஓடு ஒன்றினது உற்பத்திக் கிரயம், விற்பனை விலை, அதனடிப்படையிலான இலாபமும் இலாப சதவீதமும் நிரூபணமாகின்றது. எரகம தொழிற்சாலையின் உற்பத்திக் கிரய அடிப்படையில் ஏனைய தொழிற்சாலைகளிலும் ஓடு ஒன்றினது உற்பத்தி விலை கணிப்பிடப்படுவதால் அத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் ஓடுகளது விற்பனை விலையைத் தீர்மானிக்கும் முறைமை சரிவர அமையாது தீர்மானிக்கப்படும் விற்பனை விலையானது பொருளாதார ரீதியான ஆக்கபூர்வமான விலையாக அமையவில்லை. அதற்கமைய, கூட்டுத்தாபன தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் ஓடுகளது விற்பனை விலைத் தீர்மானத்தால் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடையக் காரணமாக அமைந்தது.

**(இ) மொத்த இலாபம்**

---------------------------

கூட்டுத்தாபனத்தின் கீழான 04 ஓட்டுத் தொழிற்சாலைகளின் 2017, 2018, 2019 யூலை 31 வரையான முதுன் ஓடுகள், பெதலி ஓடுகள், செவன விசேட, புதிய செவன ஓடுகள் என்பவற்றின் விற்பனைப் பெறுமதி முறையே ரூபா 75,271,385, ரூபா 16,115,499 மற்றும் ரூபா 9,523,401 என்பனவாகும். அதற்கமைய, அக்காலப்பகுதியின்போது மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 44,125,862 ஆகவும் விற்பனை வருமானம் ரூபா 100,910,285 ஆகவுமிருந்தது. ஓடுகளது விற்பனையால் கூட்டுத்தாபனம் 02 ஆண்டுகள் 07 மாதங்களின்போது பெற்ற மொத்த இலாபம் ரூபா 56,784,423 ஆகும். கூட்டுத்தாபனம் விலையைத் தீர்மானிக்கையில் பிழையற்ற முறைப்படி விற்பனை விலையைத் தீர்மானித்திருப்பின் இந்த மொத்த இலாபத்தை அதிகரித்திருக்க இயலும்.

**(ஈ) விற்பனையாகிய ஓடுகள் நிராகரிக்கப்படுதல்**

------------------------------------------------------------------------

கூட்டுத்தாபனத்தின் உஸ்வெவ மற்றும் யட்டியன தொழிற்சாலைகள் இரண்டும் 2017 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு 87,650 பெதலி ஓடுகளையும் 1,250 முதுன் ஓடுகளையும் ரூபா 4,825,600 க்கு விற்பனை செய்திருந்தன. இந்த ஓடுகளில் உஸ்வெவ தொழிற்சாலை அனுப்பிய 39,200 பெதலி ஓடுகளும் 412 முதுன் ஓடுகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் பெறுமதி ரூபா 2,147,288 ஆகும். நிராகரிக்கப்பட்ட ஓடுகளின் பொருட்டு கணக்காய்வுத் தினம் வரை ரூபா

2,116,800 கூட்டுத் தொகை பெறுமதியுடைய 39,200 பெதலி ஓடுகள் மீண்டும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் தரமற்ற ஓட்டு உற்பத்தி மற்றும் விற்பனை காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 2,116,800 இழப்பு ஏற்பட்டிருந்தது.

### 3.2.5 எஞ்சிய கையிருப்பு

2017, 2018 ஆம் ஆண்டுகளின் இறுதித் தினங்களில் உள்ளவாறானதும் 2019 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறானதுமான 04 தொழிற்சாலைகளது ஓட்டுக் கையிருப்பு தொடர்பான விபரமும் விளக்கமும் பின்வரும் அட்டவணை மற்றும் படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

**மொத்தக் கையிருப்பு (ஓடுகள்)**

| தொழிற்சாலை | 2017 | 2018 | 2019 யூலை 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| உஸ்வெவ | 771,865 | 709,297 | 626,218 |
| மஹியங்கனை | 293,098 | 207,203 | 191,973 |
| யட்டியன | 296,834 | 234,760 | 205,079 |
| பிங்கிரிய | 140,096 | 97,631 | 69,917 |
| மொத்தம் | 1,501,893 | 1,248,891 | 1,093,187 |

(அ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் உற்பத்திகளைத் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ள தொழிற்சாலைகள் தொடர்பான பரிசீலனையின்போது மஹியங்கனை தொழிற்சாலையில் 2019 யூலை 31 இல் உள்ளவாறு இருந்த 191,973 ஓடுகள் தொழிற்சாலை வளாகத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வுக் களப்பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. ஓடுகள் அடுக்கி வைக்கப்படும்போது உடைந்து போதல், கீழே உள்ள ஓடுகள் சேறு படிந்து அல்லது மண்படிந்த தோற்றமாற்றத்திற்குள்ளாவதும் காரணமாக அவற்றை விற்பனை செய்ய முடியாதிருந்தது. அக்கையிருப்பில் 85,000 ஓடுகள் 2012 க்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டனவாகும். மஹியங்கனை தொழிற்சாலையில் ஓடுகளைக் குவித்து வைத்திருக்கும் விதம் 13 ஆம் 14 ஆம் படங்களின் மூலம் நிரூபணமாகின்றது.



படம் - 13



படம் - 14

(ஆ) யட்டியன தொழிற்சாலையில் 2019 யூலை 31 இல் உள்ளவாறு இருந்த ஓட்டுக் கையிருப்பில் 1 ஆம் தர இலக்கமுடைய 122,826 ஓடுகளில் 10 சதவீத, 15 சதவீத எண்ணிக்கையிலானவை வேலை பூர்த்தியாகிய பொருட்கள் உள்ள பிரிவில் வெயிலிலும் மழையிலும் இருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அவை நிறமிழந்து அவற்றை 1 ஆந் தர இலக்க ஓடுகளாக விற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. மேலும், 9,954 சிங்கள கொகு ஓடுகள் அநேக ஆண்டுகளாக இருந்தபோதும், அவை கொள்வனவாளர்களால் நிராகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட முடியாத நிலைமையில் இருந்ததும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, ஓராண்டிற்கு முன்னர் கொள்வனவாளர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்ட 7,250 சிங்கள கொகு ஓடுகளும் (1ஆம் இலக்கம்) வாடிக்கையாளர்களால் நிராகரிக்கப்பட்ட ஓடுகளும் அக்கையிருப்பில் அடங்கியிருந்தன. ஓடுகளது கையிருப்பு குவித்து வைக்கப்பட்டுள்ளமை 15 ஆம் 16 ஆம் படங்கள் மூலம் நிரூபணமாகின்றது.



படம் - 15



படம் - 16

(இ) உஸ்வெவ தொழிற்சாலையில் 2019 யூலை 31 இல் உள்ளவாறிருந்த ஓட்டுக் கையிருப்பு 626,218 ஆகும். வெயிலிலும் மழையிலும் அவை இருக்க இடமளிக்கப்பட்டதால் பெருமளவு ஓடுகள் நிறமிழந்து தொழிற்சாலை வளாகத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. மேலும், 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட மூன்றாந்தரத்திலான 45,002 ஓடுகள் விற்பனை செய்ய முடியாதன என களப் பரிசோதனையின்போது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது. ஓட்டுக் கையிருப்பு குவித்து வைக்கப்பட்டிருப்பது 17 ஆம் 18 ஆம் படங்களில் காணப்படுகின்றன.



படம் - 17



படம் - 18

## 3.3 நெடுங்காலமாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள்

கூட்டுத்தாபனத்திற்குரிய தொழிற்சாலைகளில் வே உட, எலயாபத்துவ, ஓட்டுச்சுட்டான், பங்கதெனிய ஆகிய 04 தொழிற்சாலைகளும் நெடுங்காலமாக மூடப்பட்டுள்ளன. இந்த தொழிற்சாலைகள் இலங்கையின் 03 மாகாணங்களில் 04 மாவட்டங்களில் உள்ளன. அத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு பின்வருவன காரணமாக அமைந்தன.

i. ஓடுகளுக்கான வாடிக்கையாளர்களது கோரிக்கை விரைந்து குறைவடைந்தமை.

ii. ஓட்டு உற்பத்திக்கான மூலப்பொருட்களின் பற்றாக்குறை

iii. நெடுங்காலமாக இத்தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்கியமை.

iv. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தசூழ்நிலை காரணமாக ஓட்டுச்சுட்டான தொழிற்சாலை மூடப்பட்டமை.

தொழிற்சாலைகளை மூடிவிடுவதற்கான பொழிப்புடனான விபரம் பின்வரும் அட்டவணையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| தொழிற்சாலை | பெதலி ஓடுகளது (வருடாந்த) சுற்றோட்டம் | மூடப்பட்ட திகதி |
|---|---|---|
| வேஉட | 3,700,000 | 2009.01.19 |
| எலியாபத்துவ | 3,700,000 | 2009.08.26 |
| ஒட்டுச்சுட்டான் | 2,500,000 | 1990.08.26 |
| பங்கதெனிய | 3,700,000 | 2003.03.22 |

மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்சாலைகளில் பங்கதெனிய தொழிற்சாலைக்குரிய காணியைத் தவிர சகல சொத்துக்களும் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி கேள்விகள் கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் அத்தொழிற்சாலையின் காணி மாத்திரமே எஞ்சியுள்ளது.

### 3.3.1 சொத்துக்கள் மற்றும் ஏனைய வசதிகளின் பயன்பாடு

#### (அ) காணியை சட்டபூர்வமாகத் சுவீகரித்தல்

கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூலச் சான்றின் மூலம் நெடுங்காலமாக மூடப்பட்டுள்ள இந்த 04 தொழிற்சாலைகளுக்குரிய காணி 63 ஏக்கர், 02 றூட், 16.7 பேர்ச்சர்ஸ் ஆகும். அந்தக் காணிகளது சட்டபூர்வ உரித்து 2019 யூலை வரை கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அத்தொழிற்சாலைக்குரிய காணிகளை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பான விபரத்தின் பொழிப்பு பின்வருமாறு.

| தொழிற்சாலை | உரித்தை உறுதிசெய்யும் ஆவணம் | காணியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பேர்ச்சர்ஸ் |
| வே உட | நில அளவைப் பத்திரம் இலக்கம் 1932 | 09 | 01 | 31 |
| எலியாபத்துவ | நில அளவைப் பத்திரம் இலக்கம் 3652 | 33 | 02 | 07 |
| ஒட்டுச்சுட்டான் | நில அளவைப் பத்திரம் இலக்கம் 3553 | 13 | 0 | 36.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| பங்கதெனிய | நில அளவைப் பத்திரம் இலக்கம் 1674 | 07 | 01 | 22 |
| | | ------ | ------ | ------ |
| மொத்தம் | | 62 | 04 | 96.7 |
| | | === | === | === |

**(ஆ) சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுதல்**

---

நெடுங்காலமாக மூடப்பட்டவாறிருக்கும் தொழிற்சாலைகளது சொத்துக்கள் தொடர்பாக விலைமதிப்புத் திணைக்களத்தின் மூலம் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் தொழிற்சாலைகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட தினத்தில் உள்ளவாறான சந்தைப் பெறுமதி ரூபா 154,557,750 கூட்டுத் தொகையாகும். தொழிற்சாலைகள் மூடப்பட்ட தினம் முதலாக அச்சொத்துக்கள் பயனற்றவாறிருந்தன. மேலும், அச்சொத்துக்களது மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவுமில்லை. பின்வரும் அட்டவணை விபரத்தைத் தெரிவிக்கின்றது.

| தொழிற்சாலை | தொழிற்சாலை மூடப்பட்ட திகதி | மதிப்பீடு செய்யப்பட்ட திகதியும் இலக்கமும் | மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரம் | மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| வே உட | 2009.01.19 | 2011.05.11 குரு/இவ/2479,2480 | தொழிற்சாலையின் சகல சொத்துக்கள் | 100,400,000 |
| எலயாபத்த | 2009.08.26 | 2011.04.25 பிரதிபா/ஈ33/02/3 | காணி, கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள், வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் | 34,157,750 |
| ஒட்டுச்சுட்டான் | 1990.08.26 | 2012.12.31 MU/LM/42 | காணியும் கட்டிடங்களும் | 20,000,000 |
| | | | | ----------------- |
| மொத்தம் | | | | 154,557,750 |
| | | | | ======== |

**(இ) வாகனங்கள் தொடர்பான பரிசீலனை**

-----------------------------------------------------------

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வே உட மற்றும் ஒட்டுச்சுட்டான் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமாக இருந்த மோட்டார் வாகனங்களது பெறுமதி ரூபா 1,314,873 கூட்டுத் தொகையாகும். எனினும், 2019 யூலை மாதமளவில் அத்தொழிற்சாலைகளுக:குரிய அல்லது அத்தொழிற்சாலைக் காணிகளில் மோட்டார் வாகனங்கள் எதுவும் தரித்து வைக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) எலாயபத்துவ தொழிற்சாலைக்குரிய சொத்துக்களை வெளி நபர்களுக்கு வழங்குதல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த ஓட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்கள் 2012 ஆம் ஆண்டில் தன்னிச்சையாக இழப்பீட்டுடன் (VRS) ஓய்வு பெற்றிருந்தனர். அத்தொழிற்சாலைக்குரிய காணியும் கட்டிடங்களும் செங்கல் உற்பத்திக்காக சந்தஹிறு சேயவுக்கு சட்டபூர்வ உடன்படிக்கை எதுவுமின்றி இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்திற்குரிய 06 கட்டிடங்கள் கட்டணமின்றி இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதற்கு வழங்கப்பட்டதால் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) பங்கதெனிய தொழிற்சாலைக் கட்டிடங்களை தகர்த்து அப்புறப்படுத்துதல்**

------------------------------------------------------------------------------------------------------------------

(i) 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி பங்கதெனிய தொழிற்சாலைக் கட்டிடங்களைத் தகர்த்து அப்புறப்படுத்துவதற்கென பிரசித்த கேள்விகள் கோரப்பட்டு முதலாவது கேள்வியாளருக்கு அதனை ரூபா 30,100,000 க்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இந்த சிபார்சுக்குரிய கேள்வி வழங்கல் மற்றும் பண அறவீடு தொடர்பான கோவைகளோ அல்லது எழுத்துமூலச் சான்று எதுவுமோ கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கட்டிடங்களைத் தகர்த்து அப்புறப்படுத்தியமை மற்றும் பணம் அறவிடப்பட்டமை தொடர்பாக எதுவித தகவல்களையும் கணக்காய்வில் பரிசீலிக்கவும் உறுதி செய்யவும் முடியாதிருந்தது. களப் பரிசோதனையின்போது கட்டிடங்கள் தகர்த்து அப்புறப்படுத்தப்பட்டு காணி மாத்திரமே எஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2010 ஒக்டோபர் 20 ஆந் திகதிய 10/2423/425/004-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த பங்கதெனிய ஓட்டுத் தொழிற்சாலையையும் தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொண்டபோதும், அதற்கமைய செயற்படாது தொழிற்சாலைக் கட்டிடத்தையும் ஏனைய உபகரணங்களையும் (காணி நீங்கலாக) கேள்விகளைக் கோரி விற்பனை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்கொண்டு அதனைப் பரிசீலிப்பதற்கான எழுத்துமூலச் சான்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.3.2 வே உட தொழிற்சாலையைக் குத்தகைக்கு வழங்குதல்

----------------------------------------------------------------------------------------------

வே உட தொழிற்சாலைக்குரிய 09 ஏக்கர், 01 றூட், 31 பேர்ச் காணி அடங்கலாக சகல சொத்துக்களும் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையைக் கடைப்பிடிக்காது மருத்துவச் செயற்திட்டமொன்றை அமுலாக்குவதற்கான முன்மொழிதல் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. அதற்கென 2019 யூலை 25 ஆந் திகதியன்று காணி, கட்டிடங்கள், மற்றும் இயந்திர சாதனங்களது கூட்டுப் பெறுமதி ரூபா 136,735,000 என மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெறப்பட்டிருந்தது. அச்சொத்துக்களை மாதாந்தம் ரூபா 200,000 வாடகை வருமானத்தில் 50 ஆண்டுகளுக்குப் பெறும் அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு நிர்வாகத்தினர் உடன்படிக்கையைத் தயாரித்திருந்தபோதும், தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் சட்டபூர்வ உரித்து கூட்டுத்தாபனத்திற்கு இல்லாதிருந்தமையால் இச்செயற்திட்ட முன்மொழிதல் அமுலாக்கப்பட முடியாதிருந்தது.

### 3.3.3 ஒட்டுச்சுட்டான் தொழிற்சாலையை மீண்டும் திறத்தல்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2016 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்ட முன்மொழிதல்களின் மூலம் ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் சிகப்புக் களிமண் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டபோதும், நிறுவனத்தின் நிதி நெருக்கடி மற்றும் பொதுத்திறைசேரியிலிருந்து நிதி கிடைக்காமை காரணமாக அது இடை நடுவே நிறுத்தப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதலாக இத்தொழிற்சாலையை மீண்டும் செயற்படுத்துவது சம்பந்தமாக அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. அவ்வவ்போது தொழிற்சாலையின் முன்னேற்றம் தொடர்பாகவும் செயற்திட்ட முன்மொழிதல் தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தற்சமயம் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் கண்டி அபிவிருத்தி அமைச்சின் பரப்பெல்லைக்குள் வந்துள்ளதையடுத்து ‘‘சனாதிபதி செயலணிப் படை - வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி’’யின் கீழ் ஒட்டுச்சுட்டான் தொழிற்சாலையின் மீள் வியூகப்படுத்தல் சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டவாறுள்ளன. 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதியளவில் தொழிற்சாலையின் காணியைத் தீர்வு செய்வதற்கான நில அளவை அறிக்கை பெறப்பட்டு சொத்து மதிப்பீடு கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் தினமளவிலும் அந்நடவடிக்கை முடிவடையாதிருந்தது. அத்தொழிற்சாலைக்குரிய சகல சொத்துக்களும் ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபடுத்தப்படாது பயனற்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

## 3.4 மட்பாண்டக் கூட்டுத்தாபனப் பணிகளை ஒழுங்குபடுத்தலும் கூட்டுத்தாபனம் வழங்கும் சமூக, பொருளாதார நலன்களும்

### 3.4.1 அரசாங்க கொள்கையை அமுலாக்குதல்

(அ) 2010 ஒக்டொபர் 28 ஆந் திகதிய அமப/10/2423/425/004-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சகல தொழிற்சாலைகளும் வெவ்வேறாகவோ அல்லது ஒருங்கிணைந்தோ 30 ஆண்டுகால நெடுங்காலக் குத்தகையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பிரத்தியேக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கமைய தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நிர்வாகத்தினர் செயற்படவில்லை.

(ஆ) 2011 செப்டம்பர் 19 ஆந் திகதிய MSRED/2/CM/44 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் மூலம் அங்கீகாரத்தைக் கோரியிருந்த (3) ஆம் பரிந்துரையின் பொருட்டு 2011 நவம்பர் 17 ஆந் திகதிய அமப/11/2068/553/018-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட மினரல் சேன்ட் நிறுவனத்தினூடாக 2012 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தை மீள வியூகப்படுத்துவதற்காகப் பெறப்பட்ட முற்பணமானது கூட்டுத்தாபனத்தின் சகல பொறுப்புகளையும் விடுவித்ததன் பின்னர் எஞ்சும் தொகையில் கொடுப்பனவு செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டுமாயினும் அதற்கமைய அத்தொகையைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 மே 13 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் பொருட்டு 2015 யூன் 01 ஆந் திகதிய அமப/15/0602/012-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மீள வியூகப்படுத்தல் சம்பந்தமாக ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினது அறிக்கையின் பரிந்துரையை அமுலாக்குவதற்கு கொள்கை ரீதியாக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இத்துணைக் குழு அறிக்கையின் 01 ஆம் இலக்கத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் கம்பனிகள் அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியாக உருவாகத் தீர்மானஞ் செய்யப்பட்டபோதும், அந்த அரச ரீதியான கொள்கையை அமுல்படுத்துவதற்கு இற்றைவரை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வரிசை அமைச்சினது பங்களிப்பு

-----------------------------------------------------

மிக நீண்ட வரலாற்றையுடைய கூட்டுத்தாபனத்தின் கடமைகள் காலத்துக்கு காலம் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கியிருந்தது. அதற்கமைய, தற்சமயம் அரசாங்க முயற்சிகள், மலைநாட்டு பாரம்பரியம் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் பரப்பெல்லைக்குள் அடங்குகின்றது.

கூட்டுத்தாபனத்துக்குரிய தொழிற்சாலைகளை வெவ்வேறாகவோ அல்லது ஒருங்கிணைந்தோ தனியார் துறை முதலீட்டாளர்கள் அல்லது முதலீட்டாளர் ஒருவருக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து அதற்கான அறிவுறுத்தலை வழங்கியிருந்தது. கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளது சட்டபூர்வ உரித்தைக் கூட்டுத்தாபனம் சுவீகரிக்காமையும் இந்த ஓட்டுத் தொழிற்சாலைகளை குத்தகைக்குப் பெறுவதற்கு முதலீட்டாளர்கள் முன்வராததும் காரணமாக நாளாந்தச் செலவை ஈடுசெய்வதற்குக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளைப் பயன்படுத்தி தற்சமயம் வரை உற்பத்தி, செயற்பாட்டு, விற்பனை நடவடிக்கைகள் நடைபெற்றவாறுள்ளன.

தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்ப இத்தொழிற்சாலைக்குரிய சொத்துக்களைப் பாதுகாத்தவாறு தொழிற்சாலைகளைப் பேணுவதற்கு கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி முயற்சி செய்திருந்தார். எனினும், சொத்துக்களில் அத்துமீறிக் குடியேறுதல், உற்பத்தி மற்றும் விற்பனைகளில் பிரச்சினை நிலவுதல், ஊழியர் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடி காரணமாக அரசாங்க சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கேற்ப கூட்டுத்தாபனத்தைச் செயற்படுத்துவதற்கு நிர்வாகத்தினர் தவறியிருந்தனர். அதற்கமைய, கூட்டுத்தாபனத்தின் எதிர்காலப் பயணம் மற்றும் நடைமுறைகளை

சிக்கலின்றி சுட்டிக் காட்டுவதற்கும் வழிகாட்டுவதற்கும் அமைச்சின் நேரடித் தலையீடு தேவைப்படுவதுடன் காலத்திக்கேற்ப கூட்டுத்தாபனம் தற்போதைய நிலைமை தொடர்பாக கொள்கை ரீதியான அறிவுறுத்தலை பெறவேண்டியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 மனிதவள முகாமைத்துவம்

---

#### (அ) கூட்டுத்தாபன ஊழியர்களை ஆட்சேர்த்தல்

---

2012 மார்ச் 31 தொடக்கம் கூட்டுத்தாபன ஊழியர்கள் தன்னிச்சையாக ஓய்வு பெறுவதை (VRS) அமுலாக்கும் சந்தர்ப்பத்தில் தலைமை அலுவலகத்திலும் 07 தொழிற்சாலைகளிலும் 541 ஊழியர்கள் இருந்தனர். அவர்களுள் 495 பேர் இழப்பீட்டுடன் விலகியிருந்தனர். பின்னர் நிரந்தரப் பதவியணியின் 46 பேரையும் நாளாந்தச் சம்பள அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினரையும் பயன்படுத்தி கூட்டுத்தாபனம் செயற்பட்டவாறிருந்தது.

2019 செப்டம்பர் 30 ஆந் திகதியளவில் கூட்டுத்தாபனத்தின் 37 நிரந்தர ஊழியர்கள் தலைமை அலுவலகம் அடங்கலாக 06 தொழிற்சாலைகளில் பணியாற்றியவாறிருந்தனர். இழப்பீட்டைப் பெற்று தன்னிச்சையாக ஓய்வு பெறும் (VRS) திட்டத்தின் மூலம் சேவையிலிருந்து விலகிய நிறுவனம் ஒன்றிற்குப் பொதுத்திறைசேரியின் முன்கூட்டிய மற்றும் எழுத்துமூல அனுமதியின்றி முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அப்பால் 38 ஊழியர்கள் கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியால் 2019 செப்டம்பர் 30 ஆந் திகதி ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

#### (ஆ) அமைய அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்த்தல்

---

பொது முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளரால் 2018 ஒக்டோபர் 30 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்படும் நிரந்தர, தற்காலிக, அமைய அல்லது எவ்வகையான ஆட்சேர்ப்பும், பதவி உயர்வும், இணைத்தலும் அல்லது வேலை இடமாற்றமும் மீண்டும் அறிவிக்கப்படும் வரை நிறுத்தப்பட வேண்டுமென பணிக்கப்பட்டிருந்தது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் 2019 செப்டம்பர் மாதமளவில் 13 ஊழியர்களை அமைய அடிப்படையில் ஆட்சேர்த்து சம்பளமும் படியுமாக ரூபா 1,290,435 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4.4 நவீன உற்பத்தி முறைமையைப் பின்பற்றுதல்

-----------------------------------------------------------------------------

தற்சமயம் கூட்டுத்தாபனத்திடம் களி மண் மற்றும் களிமண்ணுடன் இணைந்த 08 உற்பத்தித் தொழிற்சாலைகள் இருந்தபோதும், அவற்றுள் 03 தொழிற்சாலைகள் நெடுங்காலமாக உற்பத்தியின்றி மூடப்பட்டுள்ளதுடன் ஏனைய 04 தொழிற்சாலைகளும் 2018 சனவரி 25 ஆந் திகதியன்று உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தன. எரகம தொழிற்சாலை மாத்திரமே தொடர்ச்சியான உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. மேலே விபரிக்கப்பட்ட தொழிற்சாலைகள் 1958 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதியின் போது நிறுவப்பட்டனவாகும். அவற்றின் ஓட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள், சூளைகள், காயவைக்கும் கூடம் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் என்பன மிகப் பழைமையானவையாகும். நெடுங்காலமாக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திய தொழிற்சாலைகளுக்குரிய இந்த இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடும்போது அவை நிரந்தரமாகவே பழுதடைந்த நிலையில் தற்போது பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

எனினும், ஓட்டுக் கைத்தொழிலுக்கான காலத்துக்கேற்ற அவசியத்தை இனங்கண்டு செப்பனிடப்பட்ட இயந்திர சாதனங்களையும் துணைப் பாகங்களையும் பயன்படுத்துவதற்கும் கைத்தொழிலில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தவும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தற்சமயம் சந்தையில் நிலவும் போட்டிக்கு ஈடுகொடுப்பதற்கும் உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகஞ் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன்மூலம் குறைந்த கிரயத்துடனும் வினைத்திறனுடனும் உயர்தரத்திலான காலத்துக்கேற்ற உற்பத்தியை சந்தையில் சமர்ப்பிக்க இயலும்.

### 3.4.5 சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு

-------------------------------------------------------------------

**(அ) கூட்டுத்தாபன காணியில் ஒரு பகுதியை விளையாட்டுத் திடலுக்கு வழங்குதல்**

-------------------------------------------------------------------------------------------------------------------------

இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவின் குடுவில் கிராமத்தில் இளைஞர்களும் யுவதிகளும் மற்றும் அதனைச் சூழவுள்ள இளைஞர் கழகங்களதும் விளையாட்டுக்கழகங்களதும் அங்கத்தவர்கள் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு விளையாட்டுத்திடல் ஒன்று அப்பிரதேசத்தில் இல்லாதிருந்தது. அதற்கமைய, அப்பிரசேதத்தின் விளையாட்டுச் சங்கங்கள், பிரதேச செயலாளர், பிரதி விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் வரிசை அமைச்சுக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு,

விளையாட்டுத் திடல் ஒன்றை வழங்குவது பொது நடவடிக்கை என்பதால் எரகம தொழிற்சாலைக்குரிய காணியில் 02 ஏக்கர், கூட்டுத்தாபனத்தின் உரித்து மாறாதிருக்கும் விதத்தில், 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த பிரதேசத்தின் இளைஞர்களதும் யுவதிகளதும் விளையாட்டுத் திறமையை உயர்த்துவதற்கான சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் பங்களித்திருந்தது.

**(ஆ) சந்தஹிறு சேய நிர்மாண வேலைக்கான செங்கல் உற்பத்திக்கு பங்களித்தல்**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

தற்சமயம் கூட்டுத்தாபனம் 04 ஓட்டுத் தொழிற்சாலைகளை அதாவது, எரகம, மஹியங்கனை, எலாயபத்துவ, பிங்கிரிய ஆகிய தொழிற்சாலைகளைப் பயன்படுத்தி அனுராதபுரத்தில் நிர்மாணிக்கப்படும் ''சந்தஹிறு சேய'' வுக்குத் தேவையான செங்கற்களை உருவாக்குவதற்கு 2012 மார்ச் தொடக்கம் காணி, கட்டிடங்கள், மூலப் பொருட்கள் என்பவற்றை வழங்கியிருந்தது. இலங்கை இராணுவம், சிவில் பாதுகாப்பு படையணி, இலங்கை விமானப் படை உத்தியோகத்தர்கள் ஆகியோரை கூட்டுத்தாபன தொழிற்சாலையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு அனுமதியளித்திருப்பதன் மூலம் சமூக நலன் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக கூட்டுத்தாபனம் பங்களித்திருந்தது.

**(இ) தீகவாபிய சைத்திய பாதுகாப்புப் பணிக்குப் பங்களிப்பு**

----------------------------------------------------------------------------------------------

தற்சமயம் கூட்டுத்தாபனம் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் ஒரேயொரு தொழிற்சாலையான எரகம தொழிற்சாலையின் மூலம் தொல்பொருள் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய, தீகவாபிய சைத்திய பாதுகாப்புப் பணிக்குத் தேவையான பொறியியல், செங்கற்களை வழங்குவதற்குக் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய, மதரீயாகவும், கலாசார ரீதியாகவும் பெறுமதி மிக்க விஹாரைகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான ஓடுகளையும் செங்கற்களையும் வழங்குவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

**(ஈ) வேலைவாய்ப்பும் பிரதேச அபிவிருத்தியும்**

-------------------------------------------------------------------

இலங்கையின் 08 மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு கூட்டுத்தாபனத்தின் இந்த ஓட்டுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருந்தன. இத்தொழிற்சாலைகளில் உற்பத்திப் பணிகள் நிறுத்தப்படாது நடைபெற்ற காலப்பகுதியின்போது இத்தொழிற்சாலைகளின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கும் பிரதேச

அபிவிருத்திக்கும் பிரதேசத்தின் வேலை வாய்ப்பிற்கும் உயர் பங்களிப்பை வழங்கியுள்ளமை களப் பரிசோதனையின்போது அங்கு வசிப்பவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற எழுத்துமூல சான்றுகள் மூலம் உறுதியானது. எனினும், தற்சமயம் கூட்டுத்தாபனத்தின் 07 தொழிற்சாலைகளில் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதால் மேற்படி நலன்களை மக்கள் இழந்திருந்தனர்.

**(உ) கூட்டுத்தாபனக் கடமைகளில் பாதுகாப்புப் பிரிவினரின் பங்களிப்பு**

2012 ஆம் ஆண்டின் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின்படி தொழிற்சாலைகளில் பணியாற்றிய பதவியணியினர் தன்னிச்சையாக இழப்பீட்டுடன் ஓய்வுபெறும் (VRS) திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருந்தனர். பெருமளவு ஊழியர்கள் கூட்டுத்தாபனத்திலிருந்து விலகியதையடுத்து கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் கூட்டுத்தாபன உற்பத்தியை தொடர்ச்சியாக நடாத்துவதற்கும் அரசாங்க பாதுகாப்புப் பிரிவினால் பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்துக்குரிய பெருமளவு காணியை அத்துமீறி அபகரித்தல் மற்றும் தனியார் துறையினரால் ஏற்படும் சாதகமற்ற தாக்கல்கள் என்பவற்றைக் குறைத்துக் கொள்வதற்கும் இராணுவ உத்தியோகத்தர்கள் மூலம் தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஓட்டு உற்பத்திக்கான விறகை வழங்குதல், தேவையான சந்தர்ப்பங்களில் ஓட்டுத் தொழிற்சாலைப் பணிகளில் அவர்களின் உழைப்பும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது.

### 3.4.6 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைவதற்குப் பங்களித்தல்

நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களின் எதிர்பார்ப்பு வறுமை, பசி, சமமின்மை என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருதல், சுற்றாடலைப் பாதுகாத்தல் சுகாதாரம் மற்றும் கல்வியை நோக்கிய முன்னேற்றம், நியாயமானதும் சக்திமிக்கதுமான நிறுவனங்களை ஸ்தாபித்தலுமே ஆகும். இந்த நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றுவதற்கான வசதிகளை வழங்குவதற்கு 07 மாகாணங்களின் 08 மாவட்டங்களில் செயற்பட்டவாறிருந்த ஓட்டு உற்பத்தி தொழிற்சாலைகளது பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஆற்றல் இருந்தது. அம்பாறை எரகம ஓட்டு உற்பத்தி தொழிற்சாலை அப்பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரேயொரு உற்பத்தித் தொழிற்சாலை ஆகும். பெருமளவானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வறுமை, பசி, சமமின்மை போன்ற துறைகளிலும் சுற்றாடலுக்கும் சுகாதாரத்திற்கும் உகந்த உற்பத்திகளை

சமுதாயத்துக்கிடையே பாவனைக்கு அளித்தலும், ஓட்டுத் தொழிற்சாலைகளில் இயற்கையாகவே உள்ள சுகாதாரத்துக்கேற்ற வளங்களைப் (மூலப்பொருட்கள்) பெற்று உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் சந்தையில் நிலவும் கோரிக்கைகளுக்கு ஈடாக உற்பத்திப் பொருட்களை வழங்குவதன் மூலம் பெருமளவானோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க இயலும்.

**04. பரிந்துரை**

----------------

(i) தற்போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்க கொள்கையின் அடிப்படையில் கூட்டுத்தாபனம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எவை என்பதைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டலை வரிசை அமைச்சின் நேரடித் தலையீட்டின் மூலம் வழங்க வேண்டும்.

(ii) அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தை காலத்தின் தேவை மற்றும் எய்தக் கூடியதுமான தீர்மானங்கள் அமுலாகும் வரை கூட்டுத்தாபனத்தின் சகல சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றைப் பயன்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதற்கும் ஆக்கபூர்வமானதும் சட்டரீதியானதுமான முதலீட்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

(iii) தீவடங்கிலும் 08 மாவட்டங்களில் உள்ள 08 ஓட்டுத் தொழிற்சாலைகளும் பங்கதெனிய தொழிற்சாலைக்குரிய காணியும் கூட்டுத்தாபனத்திடம் உள்ளன. இத்தொழிற்சாலைக்குரிய காணிகளுள் மஹியங்கனை மற்றும் எரகம தொழிற்சாலைகளுக்குரிய காணிகளது சட்டபூர்வ உரித்து மாத்திரமே கூட்டுத்தாபனத்தின் வசமுள்ளது. ஏனைய தொழிற்சாலைகளுக்குரிய காணிகளது சட்டபூர்வ உரித்தை கூட்டுத்தாபனம் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் இதுவரை முயன்றபோதும் அவற்றைச் சுவீகரிக்க முடியாது போனது. அதற்கமைய, ஏனைய காணிகளது உரித்தைச் சுவீகரிப்பதற்கும் அவற்றில் உள்ள அத்துமீறிய குடியேற்ற வாசிகளுடனான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அரசாங்க வளத்தைப் பாதுகாப்பதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iv) நெடுங்காலமாக மூடப்பட்டவாறுள்ளதும் தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதுமான தொழிற்சாலைகளில் பயனற்றிருக்கும் கட்டிடங்கள், இயந்திர சாதனங்கள், பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் என்பவற்றைப் பயனுள்ளவாறு உபயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(v) கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளதும் பயன்படுத்தப்படாதுள்ளதுமான வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(vi) எரகம தொழிற்சாலையில் ஓடுகளது உற்பத்திக்குத் தேவைப்படும் மிகத் தகைமை வாய்ந்த களிமண் குவியல், தொழில் மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன உள்ளன. பிரதேச வாசிகளும் தொழிற்சாலை ஊழியர்களும் தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபடுவதையே விரும்புகின்றனர். தொழிற்சாலையின் ஓட்டு உற்பத்தியின் பொருட்டு சந்தை உருவாகி தற்போதைய கூட்டுத்தாபனத்தின் சகல செலவுகளையும் ஈடுசெய்யக்கூடியவாறு ஓட்டுத் தொழிற்சாலை அமைவதன் மூலம் உற்பத்திகளை பல்வகைப்படுத்தியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டப்லியு .பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி


2020 திசெம்பர் 22 திகதி

ඇමුණුම 01


කන්කසන්තුරේ
කල්ලුන්ඩායි
යාපනය
ලී බඩු
ඇලුමිනියම් භාණ්ඩ
එලිපන්ටපාස්
පරන්තන්
(රසායන ද්‍රව්‍ය)
මුලතිවු
මන්නාරම
පුල්මොඩේ
(ඛනිජ වැලි)
වවුනියාව
නිලාවැලි
කැබිතිගොල්ලෑව
ත්‍රිකුණාමලය
ප්‍රිමා පිටිකම්හල
කන්තලේ
අනුරාධපුරය
කරතිවු
එප්පාවල
(පොස්පේට්)
මින්නේරිය
පුත්තලම
පොලොන්නරුව
(උකුසිරි)
පලාවි
දඹුල්ල
රංගෙදර
වාලච්චේනය
(කඩදාසි)
නරම්මල
ඇළහැර
කහටගහ
කොලොන්ගහ
මඩකලපුව
හලාවත
රත්තොට
(පෝසිලේන්)
කුරුණෑගල
වැලිද
මත්තෙගම
දිවුලපිටිය
(ගිනිපෙට්ටි)
කෑගල්ල
මහනුවර
අම්පාර
හිඟුරාන
මීගමුව
සිදුව
(තෙල් සහ මේද)
කටුනායක
වෙයන්ගොඩ
බියගම
බෝගල
අඹේවෙල
(කිරි නිෂ්පාදන)
නුවරඑළිය
බදුල්ල
වෙළඳ කලාපය
කොළඹ
රුවන්වැල්ල
සාලාව
මොනරාගල
මොරටුව
ලී බඩු
පිළියන්දල
හොරණ
ඇහැළියගොඩ
කුරුවිට
ඔක්කම්පිටිය
රත්නපුරය
පැල්මඩුල්ල
බලන්ගොඩ
කිරිමැටියාන
කහවත්ත
කුකුළේගම
දෙල්ගොඩ
රක්වාන
කොලොන්න
පැලවත්ත
දෙනියාය
ඇඹිලිපිටිය
ගිනිදූම
පල්ටුපාන
මීටියාගොඩ
හම්බන්තොට
ගින්තොට
(තුනිලැලි)
ගාල්ල
යටියන
තංගල්ල
මාතර
ප්‍රේෂකර්ම මධ්‍යස්ථාන
පිහන්භාණ්ඩ
උළු ගඩොල්
ධීවර කර්මාන්තය
මැණික් කර්මාන්තය
ලෝහ භාණ්ඩ
ප්‍රධාන මිනිරන් පතල්
මිනිරන් නිධි
සිමෙන්ති
සීනි
කැබලින්
බහු කාර්මික ප්‍රදේශ
කොළඹ
රෙදිපිළි
දුම්කොළ
සම් භාණ්ඩ
විදුරු භාණ්ඩ
පිටි
විදුලි උපකරණ
යන්ත්‍රෝපකරණ
පළතුරු ඇසිරීම
රබර් භාණ්ඩ
ප්ලාස්ටික්
රසායන ද්‍රව්‍ය
සපුගස්කන්ද
ඛනිජ තෙල් පිරිපහදු
කැලණිය
ගිනිපෙට්ටි
කවුකම්බි
ඇඹ
දෙහිවල
රෙදිපිළි
හම් භාණ්ඩ
රබර් භාණ්ඩ
රත්මලාන
රෙදිපිළි
ඖෂධ
ප්ලාස්ටික්
යන්ත්‍රෝපකරණ
හම් භාණ්ඩ
රසකැවිලි
ඇලුමිනියම් භාණ්ඩ
මොරටුව
රෙදිපිළි
රබර් භාණ්ඩ
ගිනි පෙට්ටි
ලී බඩු
හෝමාගම
යකඩ සහ වානේ
තුනී ලෑලි
මෝටර් රථ
බයිසිකල්
ගාල්ල
කළුවර ලී කැටයම්
රේන්ද ගෙතීම
පනා කැපීම
අම්පාර
ලී බඩු
උළු
ගඩොල්
සීනි
කටුනායක
ආයෝජන සංවර්ධන කලාපය I
බියගම
ආයෝජන සංවර්ධන කලාපය

# ශ්‍රී ලංකාව — ඛනිජ සම්පත් 19

**ඇමුණුම 02**



<u>අපහරණය කළ යුතු වාහන වල ඡායා රූප</u>

**19 - රූපය**



**25 – 5315 ලොරි රථය (මහියංගනය)**

**20 - රූපය**



**21 – 0304 ත්‍රීවිල් රථය(මහියංගනය)**

**21 - රූපය**



**17 – 5110 ජීප් රථය (මහියංගනය)**

**22 - රූපය**



**ලෝඩරය (මහියංගනය)**

**23 - රූපය**




**ස්කැවේටරය (මහිංගනය)**

**24 - රූපය**




**21 – 0303 ත්‍රීවීලරය (යටියන)**

25 - රූපය



36 ශ්‍රී 8145 ට්‍රැක්ටරය (උස්වැව)

26 - රූපය



(උස්වැව)

27 - රූපය



11 ශ්‍රී 8841 කාර් රථය (උස්වැව)

28 - රූපය



ජීප් රථය (බිංගිරිය)

29 - රූපය



ට්‍රැක්ටරය (බිංගිරිය)